பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்

Kālaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 07 ஞாயிற்றுக்கிழமை 21.06.2020 கதிர் 228

### இனி இது ரகசியம் அல்ல!

தேர்தல் சூடு பிடிக்கத் தொடங்க, அரசியல் அதிர்வேட்டுகளும் முழங்கத் தொடங்கியுள்ளன.

பல தடவைகள் ஒத்தி வைக்கப்பட்ட தேர்தல், மீண்டும் திகதி நிர்ணயிக்கப்பட்டு களை கட்டத் தொடங்கிய போது அமைச்சர் ஆறுமுகனாரின் மறைவை

பக்கம் 02 »

# இராணுவத்தால் இளைஞர் கிளாலியில் சுட்டுக்கொலை!

## மணல் அகழ்வில் ஈடுபட்டவேளை நேற்று மாலை வேளை பயங்கரம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜுன் 21

கிளாலியில் இருந்து துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் பளை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்ட இளைஞர் ஒருவர் அங்கே உயிரிழந்தார்.

நேற்று மாலை 5.20 மணியளவில் கிளாலியில் இலங்கை இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த - பளை, கெற்பெலியைச் சேர்ந்த - திரவியம் இராதாகிருஷ்ணன் (வயது - 24) என்பவரே பின்னர் உயிரிழந்தார் என்று அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

பக்கம் 02 »







## போக்குவரத்தை தடுத்து பளையில் வீதி மறியல்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜுன் 21

கிளாலியில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படும் மேலும் மூவரை விடுவித்துத் தருமாறு கோரியும் பளையில் ஏ-9 வீதியை மறித்து மக்கள் போராட்டத்தில்

பக்கம் 02 »

## ரிஷாத்திடம் நேற்று 5 மணிநேரம் சி.ஐ.டி. துருவித்துருவி விசாரணை

கொழும்பு, ஜுன் 21

கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனிடம் சுமார் ஐந்து மணிநேரம் சி.ஐ.டியினர் தொடர் விசாரணை நடத்தினர். இதன்போது வாக்குமூலம் வழங்கிய அவர் அங்கிருந்து வெளியேறினார்.

கடந்த 2017ஆம் ஆண்டில் லங்கா சதொசவுக்கு அரிசி இறக்குமதி செய்யப்பட்ட விடயம் தொடர்பில் அப்போது அமைச்சராக இருந்த அவர் வாக்குமூலம் அளிப் பதற்காக அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

நேற்று முற்பகல் 11.30 மணிக்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்றிருந்த ரிஷாத் பதியுதீன், அங்கிருந்து மாலை 4.30 மணிக்கு வெளியேறினார்.

## டிப்பர் மோதி மிருசுவிலில் 2 இளைஞர்கள் துயரச் சாவு!

### நேற்று மாலை மற்றுமொரு கொடூரம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜுன் 21

மிருசுவில், உசன் சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தொன்றில் இளைஞர்கள் இருவர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கிச் சென்று கொண்டிருந்த டிப்பர்வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் இந்த

பக்கம் 02 »

## கூட்டமைப்பை உருவாக்கியவன் நானே; அது இம்முறை படுதோல்வி அடையும்!

### இப்படிச் சொல்கின்றார் கருணா



அம்பாறை, ஜுன் 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியவன் நானே. போர் நடைபெறுகையில் நாடாளுமன்றில் தமிழர்களின் குரல் ஒலிக்கவேண்டும் என சிவராம் கூறியதற்கிணங்க தமிழீழ விடுதலைப்புலி

பக்கம் 02 »

## இனவாதிகளின் வாய்களை அடக்கவேண்டும் கோட்டா!

### வடக்கு—கிழக்கு தமிழ்பேசும் மக்களின் தாயகம் என்பதில் மாற்றுக்கருத்து எதுவுமில்லை என்று சம்பந்தன் தெரிவிப்பு



கொழும்பு, ஜுன் 21

நாட்டில் நல்லிணக்கத்தையும் அரசியல் தீர்வுக்கான பணிகளையும் குழப்பியடித்து முழு நாடும் பௌத்த - சிங்கள தேசம் என்ற நிலைப்பாட்டில் தெற்கு இனவாதிகள் கருத்து வெளியிட்டு வருகின்றனர். அவர்களின் வாய்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு அடக்க வேண்டும்.

- இவ்வாறு

பக்கம் 02 »

## டிப்பர் மோதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விபத்து நிகழ்ந்தது என்று பொலிஸார் தெரிவித் தனர்.

விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மற்றொருவர் படுகாயங்களுடன் அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டபோதும் அங்கு உயிரிழந்தார்.

சோரன்பற்று, இயக்கச்சியைச் சேர்ந்த 18 வயதான கண்ணதாசன் கஜீபன் என்பவரே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வேளை உயிரிழந்தார். அவரது உடல் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திலேயே உயிரிழந்த 18 வயதேயான தங்கராசா சுவேந்திரனின் சடலமும் பின்னர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

திடீரென ரயர் வெடித்ததில் ஒரு பக்கத்துக்கு இழுபட்ட டிப்பர் எதிரே வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியது என்று விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

## இனவாதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வலியுறுத்தினார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும்

மக்களின் தாயகம். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை எனவும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஓர் அடி நிலம்கூட தமிழர்களுக்கோ அல்லது முஸ்லிம்களுக்கோ சொந்தம் இல்லை. இந்தநிலையில், வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் சொந்தப் பூமி என்ற நினைப்பில் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கருத்துக்களை வெளியிடுவதை உடன் நிறுத்த வேண்டும்' என்று பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் இரா.சம்பந்தன் பதில் வழங்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த அரசின் ஆதரவுடன்தான் தெற்கில் இனவாதிகள் இயங்குகின்றனர் என்ற கருத்து எல்லோர் மத்தியிலும் இருக்கின்றது. எனவே, இவ்வாறானவர்களுக்கு ஆதரவு வழங்குவதை அரசு உடன் நிறுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் வலியுறுத்திக் கூறினார்.

## கூட்டமைப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களின் தலைவரிடம் கூறி நானே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினேன்.

– இவ்வாறு தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சரும் அம்பாறை மாவட்ட வேட்பாளருமான கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

பொத்துவில் – ஊறணியில் தேர்தல் பரப்புரையில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

வடக்கு, கிழக்கில் இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு படுதோல்வியைச் சந்திக்கும். கொழும்பை மையமாக வைத்தியங்கும் சுமந்திரன் ரணிலின் முகவர். தமிழர்களை விற்றவர். வடக்கு, கிழக்கை அவருக்குத் தெரியாது. இன்று அவர் போராளிகளைச் கொச்சைப்படுத்துகின்றார். யாழ். மக்கள் அவருக்கு தக்க பதிலடி கொடுப்பார்கள்.

அன்று அக்கட்சியில் இருந்தவர்கள் நல்லவர்கள் – வல்லவர்கள். இன்று அத்தனை பேரும் கள்வர்கள். தமிழர்களை விற்று பணம் சம்பாதித்தவர்கள். சுமந்திரன் என்று அதற்குள் புகுந்தாரோ அன்றோடு கூட்டமைப்பு அழிவை எதிர் நோக்கியது.

அம்பாறை மாவட்டத்தில் கூட்டமைப்பு முகவர் ஒருவர் இருக்கின்றார். அவருக்குள்ள வர்த்தகம் பூராக முஸ்லிம்களுடன். கஞ்சிகுடிச்சாற்றில் வெட்டும் எமது மரங்களை அவர்களுக்கு விற்பது, மலையை உடைத்து அவர்களுக்கு விற்று கமிசன் உழைக்கின்றார். ஒப்பந்தமே அவரது வேலை. மக்களுக்குச் செய்தது ஒன்றுமில்லை.

முதன் முதலில் கப்பலோட்டியவன் தமிழன். எமது சின்னம் கப்பல். அன்று வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டியவன் தமிழன். நாம் இன்று அம்பாறையில் கப்பலோட்டுவோம். இளைஞர்கள் ஒன்றுதிரண்டுள்ளனர். மகிழ்ச்சி.

அன்று என்னை மட்டக்களப்புக்கும் அம்பாறைக்கு பியசேனவையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷநியமித்தார். நான் மட்டக்களப்பில் பல கோடி ருபா பெறுமதியான வேலைகளைச் செய்தேன். பாசிக்குடா அபிவிருத்தி, கல்லடிப்பாலம், பிரண்டிக்ஸ் நிறுவனம் இப்படிப் பல. இன்று பிரண்டிக்ஸில் 7 ஆயிரம் தமிழ் யுவதிகள் வேலை செய்கின்றார்கள். அதே போல் அம்பாறையில் செய்வேன். மாற்றத்துக்காக ஒன்றுபடுங்கள் – என்றார்.

## போக்குவரத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஈடுபட்டனர்.

பளை வைத்தியசாலை முன்பாக இரவு 7 மணிக்குத் தொடங்கிய இந்தப் போராட்டம் சுமார் 15 நிமிடங்கள் நீடித்தது.

இதனால் வீதியில் பயணித்த வாகனங்கள் அனைத்தும் தமது பயணத்தைத் தொடர முடியாது போராட்டக்காரர்களின் இரு புறங்களிலும் வரிசையாக நிறுத்தப்பட்டன.

அம்புலன்ஸ் ஒன்று மட்டும் செல்வதற்கு வழிவிட்ட போராட்டக்காரர்கள் ஏனைய வாகனங்கள் செல்ல முடியாதவாறு வீதியை மறித்து அமர்ந்திருந்தனர்.

இதையடுத்து அங்கு வந்த கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜே.புஸ்ப குமார, போராட்டக்காரர்களுடன் பேச்சு நடத்தினார்.

சம்பவம் குறித்து கிளாலிப் படை முகாமுக்குச் சென்று தான் நேரில் விசாரணை நடத்துவார் என்றும் அங்கு படையினரால் வேறு யாராவது தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அவர்களையும் விடுவித்து வருவார் என்றும் அதற்கு ஒரு மணி நேர கால அவகாசம் தனக்குத் தருமாறும் அவர் போராட்டக்காரர்களிடம் கோரினார்.

அதனை ஏற்றுக்கொண்ட போராட்டக்காரர்கள் தமது போராட்டத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தினர்.

கிளாலியில் கள்ள மணல் அள்ளிக் கொண்டிருந்தவர்கள் மீது படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

கேட்டுக் கேள்வியின்றி எடுத்ததும் துப்பாக்கிச் சூடு நடத்திய படையினரைக் கண்டித்தும் சுட்டுக் கொல்லப்பட்ட திரவியம் இராதாகிருஷ்ணனின் குடும்பத்தினருக்கு நியாயம் கிடைக்கவேண்டியும் படையினரின் பிடியில் உள்ளனர் என்று கருதப்படும் மேலும் மூவரை விடுவிக்கக் கோரியும் போராட்டக்காரர்கள் இந்த வீதி மறியலில் ஈடுபட்டனர்.

படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 4 சந்தேகநபர்களும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு அவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் இன்று அவர்கள் நீதிவானிடம் முற்படுத்தப்படுவார்கள்.

## இராணுவத்தினரால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இரத்தம் தோய்ந்த நிலையில் ஓட்டோ ஒன்றில் அவரைப் பளை வைத்தியசாலைக்குக் கொண்டு வந்து சேர்த்தபோதும் அங்கு ஒன்றரை மணி நேரமாக மருத்துவர் இல்லாததால் அவருக்குச் சிகிச்சை வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

"வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட ஒருவர் உயிரிழந்துள்ளார். இறப்புக்கான காரணம் குறித்து உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னரே சொல்ல முடியும். அதற்காகச் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது" என்று பளை மருத்துவமனை பொறுப்பு மருத்துவர் தெரிவித்தார்.

முகமாலை – கிளாலி வீதியில் இருக்கும் இராணுவ முகாமின் அருகே டிராக்டரில் மணல் கொள்ளை இடம்பெறுவதாக இராணுவத்தினருக்கு தகவல் கிடைத்தது என்றும் –

அந்தத் தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்கு படையினர் சென்றனர் எனவும் –

படையினரைக் கண்டதும் டிராக்டர்கள் தப்பியோடிவிட அவற்றுக்கு மணல் ஏற்றிவிட்டு தனது மோட்டார் சைக்கிளில் வந்தவரான இராதாகிருஷ்ணனைச் சிப்பாய் ஒருவர் மறித்தார் என்றும் –

சிப்பாயின் சமிக்ஞையை மதிக்காதது மட்டுமல்லாமல் அவரைத் தள்ளி வீழ்த்திவிட்டு இராதாகிருஷ்ணன் தப்பிச் செல்ல முயன்றபோது கீழே வீழ்ந்த சிப்பாய் எழுந்து அவரை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தார் என்றும் –

பளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இராணுவச் சிப்பாய் தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருக்கிறார் என்று பொலிஸ் அதிகாரிகள் கூறினர்.

சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்தவரைப் பளை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றவேளை வைத்தியசாலையில் வைத்தியர் எவருமே இல்லை என்றும் –

தாதியர்களே இருந்தனர் எனவும் –

இதனால் எந்தவொரு சிகிச்சையும் அளிக்கப்படவில்லை என்றும் – உயிரிழந்தவரின் உறவுகள் தெரிவிக்கின்றனர்.

அந்த நேரத்தில் ஒரேயொரு வைத்தியரே நிரந்தரமாக பணியில் உள்ள நிலையில் அவர் பணி முடிந்து வீடு திரும்பியிருந்தார். ஓர் ஒப்பந்த வைத்தியரும் அங்கு பணியாற்றுகின்றார். சூட்டுக் காயத்துடன் இளைஞர் அனுமதிக்கப்பட்ட சமயம் அவரும் விடுமுறையில் இருந்தார் என்று வைத்தியசாலைத் தரப்பினர் கூறுகின்றனர்.

மணல் கடத்தலில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட மேலும் நால்வர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் வாக்குமூலம் பெற்றதன் பின்னரே சம்பவம் தொடர்பான முழுமையான விவரம் தெரியவரும் என்று பொலிஸ் அதிகாரிகள் கருதுகின்றனர்.

சம்பவம் இடம்பெற்றது பளைப் பொலிஸ் பகுதி என்பதாலும் சம்பந்தப்பட்டிருப்பவர் அதே பகுதியில் கடமையாற்றும் இராணுவப் பிரிவைச் சேர்ந்தவர் என்பதாலும் இந்த வழக்குத் தொடர்பான விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையமும் அதன் அதிகாரிகளுமே முன்னெடுப்பார்கள் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜே.புஷ்பகுமார நேரில் வந்து சடலத்தைப் பார்வையிட்டுள்ளார்.

இளைஞனின் உயிரிழப்பால் கொதிப்படைந்துள்ள உறவினர்களும் நண்பர்களும் பளை வைத்தியசாலையில் நின்றிருந்த பொலிஸாருடன் வாக்குவாதப்பட்டனர்.

கேட்டுக் கேள்வியின்றி துப்பாக்கியால் சுட்ட படையினரின் செயலைக் கண்டிக்கும் அவர்கள் தமக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்றும் கொந்தளித்தனர்.

உயிரிழந்த இராதாகிருஷ்ணன் பயணித்த மோட்டார் சைக்கிள் சம்பவ இடத்திலேயே உள்ளது.

நேற்று இரவு 10 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்த நீதிவான் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் சடலத்தை உடற்கூறுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒட்டிய நிகழ்வுகள் சர்ச்சைக்குரியனவாக அரங்கேறி முடிந்தன.

அதற்குப் பிறகு முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கொளுத்திப் போட்ட வெடியும், கருணா 'தன்னிலை மறந்தது' கழற்றிப் போட்ட படையினர் படுகொலைகள் என்ற கிரனேட்டும் பெரும் அரசியல் அதிர்வேட்டுகளாக வெடித்துள்ளன.

2011இல் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியாவிடம் ஆறு விக்கெட்டுகளினால் தோற்று, உலகக் கிண்ணத்தை இரண்டாவது தடவையாகவும் கைப்பற்றும் அரிய சந்தர்ப்பத்தைக் கோட்டைவிட்டது இலங்கை.

அப்போது விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்தவர் மஹிந்தானந்த அளுத்கமகே.

இப்போது ஒன்பது ஆண்டுகள் கழித்து அந்த இறுதியாட்டம் குறித்து திடீரென புதுக்கதையை அவிழ்த்து விட்டிருக்கின்றார் அவர்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் நீண்ட காலம் விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்தவர் மஹிந்தானந்த.

*"அந்த ஆட்டத்தைக் காட்டிக் கொடுத்து வெற்றியை விற்றுவிட்டார்கள். அதற்கு என்னிடம் ஆதாரம் உண்டு. காலமும் தேவையும் வரும் போது அதனை அம்பலப்படுத்துவேன்"* – என்ற அதிரடியைத் தான் அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

மகரகமவில் பல நூறு கோடி ரூபாவுக்கு ஆளும் தரப்பு பெரிய கிரிக்கெட் மைதானம் ஒன்றைக் கட்ட முயன்ற போது, அது வீண் செலவு – விரயம் – என்று எதிர்ப்புக் குரல் எழுப்பி அந்தத் திட்டத்தைத் தவிடு பொடியாக்கியவர்களுள் முன்னாள் கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்கார முக்கியமானவர்.

ஆளும் தரப்பின் பெரிய ஒப்பந்த முயற்சிக்கு அவர் அப்படி ஆப்படித்த பின்னர் ஒரு சம்பவம் சில தினங்களுக்கு முன்பு நடந்தது.

எப்போதும் சர்ச்சையை ஏற்படுத்தும் எஸ்.பி திஸநாயக்கா மூன்று, நான்கு தினங்களுக்கு முன்னர் எந்தவிதக் காரணமுமின்றி புதிய கதை ஒன்றை செய்தியாளர் மாநாடு ஒன்றில் அவிழ்த்து விட்டார்.

*"நுவரெலியாவில் கோல்ப் மைதானம் ஒன்றை ஸ்தாபிக்கும் ஒரு திட்டத்துடன் குமார் சங்கக்கார என்னிடம் வந்தார். ஒரு மில்லியன் டொலர் (சுமார் இரண்டாயிரம் கோடி ரூபா) திட்டம் அது. அதற்கு இடம் ஒதுக்கித் தந்தால் வருடம் ஒரு லட்சம் கோல்வ் வீரர்கள் சுற்றுலாப் பயணிகளாக இலங்கைக்கு வருவர். அந்நிய செலாவணி வரும் என்றெல்லாம் அவர் கூறினார்."* – என திஸநாயக்கா கதை அவிழ்த்து விட்டார்.

அப்போதே சங்காரவுக்கு அத்துணை நிதி எங்கிருந்து கிடைக்கும் என்று பலரும் புருவத்தை உயர்த்தத் தவறவில்லை.

அப்படி ஒரு பேச்சை – புரளியை – எஸ்.பி.திஸநாயக்கா தென்னிலங்கை மக்கள் மத்தியில் கிளப்பி விட்ட சில தினங்கள் கழிந்ததும், அதே சங்கக்கார தலைமை வகித்த அணி குறித்து இப்படி ஒரு வெடியைக் கொளுத்திப் போட்டிருக்கின்றார் மஹிந்தானந்த அளுத்கமகே.

அவ்வளவுதான். தென்னிலங்கை அரசியல் இப்போது சூடு பிடித்துவிட்டது.

திலங்க சுமதிலாப, கனில் ஹந்துன்நெத்தி, காமினி லொக்குகே, தயாசிறி ஜெயசேகர என்று வரிசையாக ஒவ்வொருவரும் இவ்விடயத்தை ஒட்டி நீட்டி முழக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

இப்போதைய தேர்தல் அரசியலின் மேடைகளில் – குறிப்பாக இலத்திரனியல் ஊடக மேடைகளில் – பிரதான பேசு பொருள் இதுதான்.

இந்த கிரிக்கெட் ஆட்டத் தோல்வியின் பின்னர் அடுத்த நாள் விமான நிலையத்தில் வந்திறங்கிய இலங்கை வீரர்களை செய்தியாளர்கள் சூழ்ந்து கொண்டனர்.

*"அணித் தலைவர் பதவியில் நீடிப்பீர்களா?"* – என்று குமார் சங்கக்காரவிடம் கேட்கப்பட்டது.

*"நாங்கள் இந்தக் சுற்றுப் போட்டியில் நன்றாகத்தானே விளையாடினோம். கடைசி – இறுதி – ஆட்டத்தைத்தான் கோட்டை விட்டோம். அதற்காக நான் ஏன் பதவி விலக வேண்டும்?"* – என்று கேட்டார் சங்கக்கார.

ஆனால், அடுத்த நாளே கொழும்பில் கிரிக்கெட் சபைக் கூட்டத்தில் அவர் தமது அணித் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்வது குறித்து அறிவிக்க வேண்டியவரானார்.

அது போன்ற திடீர்த் திருப்பங்கள், அதிரடித் தகவல்கள் இந்த விடயத்தில் வரும் என்று ஆரூடம் வெளியிட்டார் எனது கொழும்பு ஊடக நண்பர் ஒருவர்.

இந்த விகாரம் தொடர்பான பின்புலத்தைத் தேடித் துருவி அறியும் 'எக்ஸைட்மெண்டில்' அவர் இருக்கின்றமையை பேச்சில் உணரமுடிந்தது.

*"மலிந்தால் சந்தைக்கு – சந்திக்கு வரும்தானே" என்றேன் நான்.*

*"சந்திக்கு விவகாரத்தை முந்திக் கொண்டு இழுத்து வருவதுதானே எமது வேலை..."* – என்று விடயத்தைப் பிய்த்து உதறப் போகின்றவர் போல பதிலளித்தார் அவர்.

தேசத்தையும் தேர்தலையும் ஒரு கலக்குக் கலக்கக் கூடிய விடயத்தில் அவர் என்ன சாதிக்கப் போகின்றார் எனப் பார்த்திருக்கின்றேன் நான்...!

–மின்னல்–

# தந்தை செல்வாவின் சமஷ்டிக் குதிரையில் ஏறி நிற்கின்றாராம் சி.வீ.விக்கினேஸ்வரன்

## அவருடன் இப்போது இருப்பவர்களின் வரலாறு அவருக்குத் தெரியாதா என்று சங்கரி கேள்வி

(கி.வசந்தரூபன்)

வவுனியா,ஜூன்21

தந்தை செல்வா ஏறிய குதிரையில் சி.வீ.விக்கினேஸ்வரன் ஏறி நிற்கின்றார். அவர்களுடன் இருப்பவர்களின் வரலாறு அவருக்கு தெரியாதா என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் -

கடந்த காலத்தில் பல்வேறு அமைப்புகள் ஒன்றாக இருந்து உருவாக்கிய ஒற்றுமை தற்போது மோசமான நிலைக்கு சென்றுள்ளது. தமிழர் விடுதலை கூட்டணி சில்லறை கட்சியல்ல. மட்டக்களப்பில் குத்தகைக்கு விட்டிருப்பதாக சொல்கிறார்கள். தமிழர் விடுதலை கூட்டணியை நாம் யாருக்கும் குத்தகைக்கு கொடுக்கவில்லை. ஆனால் அங்கு ஒருவரை வாடகைக்கு பெற்றுள்ளார் சேனாதிராஜா. வரலாறு தெரியாதவர்களே இவ்வாறு கதைக்கின்றனர். தங்களது மோசமான நிலையை மூடி மறைப்பதற்காக அனைத்து பழியையும் எம் மீது போடுகின்றனர். அன்றிலிருந்து இன்று வரை தமிழர் விடுதலைக்கூட்டணி எந்தவிதமான தப்பினையும் செய்யவில்லை. மக்களை காட்டியும் கொடுக்கவில்லை. அவர்களுக்கு விரோதமான செயற்பாடுகள் எதனையும் செய்யவில்லை.

தந்தை செல்வா கூட்டணி அமைத்த உடனேயே தமிழரசு கட்சி மூடப்பட்டுவிட்டதுடன், தமிழரசு கட்சியும், தமிழ் காங்கிரஸும் ஒன்று சேர்ந்துவிட்டன. அதன் பின்னர் அவர் உயிருடன் இருந்த 2 வருடங்களும், இறந்த பின்னர் 26 வருடங்களும் என 28 வருடங்கள் இயங்காமல் இருந்த தமிழரசுக் கட்சியைத்தமிழ் செல்வன் அங்கீகரித்ததுடன், விடுதலைப் புலிகள் சார்பிலே க்கட்சியால் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த தேர்தலில் கூட்டணியை ஒரு சிறிய கூட்டமோ, சிறிய கருத்தரங்கோ வைக்க விடவில்லை. கூட்டணிக்காக ஒருவரும் வாகனம் ஓடமுடியாது. அனைத்து வாகனங்களும் தமிழ் கூட்டமைப்பிற்குத்தான் ஓட முடியும் என்றனர். கூட்டணிக்கு ஆதரவானவர்களிடம் சென்று வாக்காளர் அட்டையைப் பெற்றுக்கொண்டனர். வாக்கு போடுவதற்காக அரசாங்க உத்தியோகத்தர்கள் உட்பட பலரை அனுப்பினார்கள். அவர்களுக்கு வேலை கள்ள ஒட்டு போடுவதுதான். துரோகிகள், மானங்கெட்டவர்கள் பாடசாலை மாணவர்களையும், பல்கலைக்கழக மாணவர்களையும் பயன்படுத்தினார்கள். கூட்டமைப்பிற்கு வாக்கு போடுபவர்களைத் தவிர மற்றவர்களின் வாக்குகளைத் தாங்களே போட்டனர். ஓமந்தையிலும், முகமாலையிலும் வாக்குகள் போடப்பட்டன. பல கள்ள வாக்குகள் போட்டனர். இறுதியில் கீழ்தரமாகப் பிரச்சாரம் செய்து, மக்களை வெருட்டி, வரலாறு காணாத நிலையில் 22 பேர் வெற்றி பெற்றிருந்தனர்.

ஒருவருக்கு ஒரு இலட்சத்து இருபதாயிரம் வாக்குகள் எங்கிருந்து வந்தது? காலையில் தோல்வியடைந்த சேனாதி மாலையில் வெற்றியடைகின்றார். இவர்கள் ஆடை அணிந்து எப்படி வீதியால் பயணிக்கின்றார்கள் என்று எமக்கு தெரியவில்லை. இது உலகம் முழுக்க தெரிந்தகதை.

இராணுவ தளபதி பொன்சேகா, விடுதலைப் புலிகளை ஒழிக்க இடமில்லாமல் பண்ணுவேன் எனக் கூறினார். அப்போது விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளாக 22 பேர் நாடாளுமன்றத்தில் இருந்தனர். யுத்தம் முடிவடைந்த பின் இராணுவத்தை இரட்டிக்கப் போவதாக பொன்சேகா கூறியிருந்தார். 6 மாதத்திற்கு பின் அவர் ஜனாதிபதி வேட்பாளர். சம்பந்தர் அப்போது சரத்பொன்சேகாவை எதற்காக ஆதரிக்கின்றோம் என விளக்கம் கொடுத்தார். புலிகளை அழித்தபடியால்தான் சரத்பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கினார்கள். எத்தனை பேர் உயிரைக் கொடுத்து உங்களை எம்.பி. ஆக்க நீங்கள் சரத்பொன் சேகாவுக்கு ஆதரவு கொடுக்கிறீர்கள்.

என்னை மக்கள் புரிந்து கொள்ளவில்லையே தவிர, நான் மக்களைப் புரிந்து கொண்டுள்ளேன். இது தான் உண்மை.

இவ்வளவு காலமும் எத்தனையோ கோவில்களை இடிக்க பார்த்துக் கொண்டிருந்த சம்பந்தன் நேற்று மட்டக்களப்பில் கோவில் இடிப்பதாக நடுங்கி நடுங்கிப் போய் கத்துகின்றார். இப்படி எத்தனை நாள்களுக்கு ஏமாற்றப் போகிறீர்கள்? இப்போது சொல்கிறார் போராட்டம் தானாம் தங்களது கேடயமாக இருந்ததாம். அந்த போராட்டத்தை நீங்களும் சேர்ந்து தானே அழித்தீர்கள்.

சேனாதிராஜாவின் வாகன அனுமதிப்பத்திரம் 40 மில்லியனுக்கு விற்றார்கள். நேற்றுப் பிறந்த புதிய தலைவர் சுமந்திரன் 62 மில்லியனுக்கு அனுமதிப் பத்திரம் எடுத்திருக்கின்றார். இந்த விடயங்களை சம்பந்தர் கதைக்கமாட்டார். அவருக்கு பல அனுமதிப்பத்திரங்கள் இருக்கின்றன. ஏனெனில் நியமன உறுப்பினர்களாக இருப்பவர்களும் அவருக்குத்தானே தாம் பத்திரங்களை கொடுப்பது. திருகோணமலையில் தொடர்ச்சியாக அவருடைய 'பைல்' கொண்டு செல்வதற்கு ஒருவரை நியமன உறுப்பினராக நியமிக்கின்றார். அவருடைய வாகன




அனுமதிப் பத்திரமும் சம்பந்தனுக்கே செல்கிறது.

நான் எந்த இயக்கத்தையும் பற்றி பேசவில்லை. ஒவ்வொரு இயக்கமும் என்ன செய்தது என்று அனைவருக்கும் தெரியும். அவர்கள் ஒவ்வொருவரும் தாம் உத்தமர்களா என யோசித்து பார்க்க வேண்டும். நான் சுத்தமா அல்லது அவர்கள் சுத்தமா என்பது அவர்களுக்கே தெரியும்.

தன்னை நாடாளுமன்ற உறுப்பினராக்காவிட்டால் கட்சியைவிட்டு போய்விடுவேன் என்று சொன்னவர் தான் சேனாதிராஜா. அவருக்கு நானே பதவியை கொடுத்தேன். இல்லை என்று சொல்லட்டும் பார்ப்போம். அதனையடுத்து மூன்று வருடங்களிற்கு பின்னர் வந்த தேர்தலில் தோல்வியடைந்து தனக்கு ஓய்வூதியம் இல்லை என்று அழுதுகொண்டு திரிந்தார். இரண்டாம் தரமும் நியமன உறுப்பினராக அவரை நானே போட்டேன். இதுதான் வரலாறு. எனது கை சுத்தம். நான் யாரையும் ஏமாற்றவில்லை. பொய் சொன்னதும் இல்லை.

தந்தை செல்வா ஏறிய குதிரையில் எல்லோரும் ஏறி இப்ப சி.வி.விக்கினேஸ்வரன் ஏறி நின்கின்றார். சமஷ்டி வேண்டுமாம். அது நடக்க கூடிய விடயமா? அல்லது சி.வீ.விக்கினேஸ்வரனுக்கு அவருடன் இருப்பவர்களின் வரலாறு தெரியாதா? இயக்கம் தொடர்பில் சொன்ன கதைகளில் அவர்களுக்கும் பங்கு இருக்கிறது. அதனால் சி.வீ.விக்கினேஸ்வரன் மீது இருந்த மதிப்பு, மரியாதை குறைந்து விட்டது. ஆனால் அவர் எல்லாவற்றையும் விட்டு எமது கட்சிக் கொள்கையை ஏற்று வந்தால் கட்சியை ஒப்படைக்க தயார். ஏனெனில் அவரது கை சுத்தமாக உள்ளது. கொஞ்சம் குழம்பியுள்ளார். எங்களுடைய தீர்வு இந்தியாவின் முறை. சமஷ்டி நடக்காது. தென்னிலங்கை ஒற்றுமையாக தந்தால் சரியே தவிர மற்றுப்படி நடக்காது. ஆகவே இந்தியாவின் முறையில்தான் இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. - என்றார்.

# இராணுவ தளபதிக்கு எதிராக சாட்சியம் வழங்கிய மருத்துவருக்கு அமெ. தஞ்சம்

போரின் இறுதிக் கட்டத்தில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் பணியாற்றிய மருத்துவர் துரைராஜா வரதராஜாவுக்கு அமெரிக்க அரசாங்கம் அரசியல் தஞ்சம் வழங்கியிருப்பதாக சிங்கள இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இராணுவ தளபதி சவேந்திர சில்வா மற்றும் அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளர் சுரேஷ் சாலே ஆகியோர் போர் குற்றங்களை செய்ததாக அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தில் மருத்துவர் துரைராஜா வரதராஜா சத்தியக் கடிதம் வழங்கியிருந்தார்.

இந்நிலையிலேயே அவருக்கு அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் வழங்கியுள்ளதாக அந்த ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீது இராணுவத்தினர் குண்டு வீசினர் எனக் கூறுமாறு விடுதலைப் புலிகள் தன்னிடம் எரிவித்தனர் என மருத்துவர் துரைராஜா கொழும்பில் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கூறியிருந்தார்.

அரச மற்றும் இராணுவ அழுத்தங்கள் காரணமாக அவர் இவ்வாறு கூறினார் எனப் பின்னர் குறிப்பிட்டிருந்தார். இராணுவத்தினரே வைத்தியசாலை மீது எறிகணைத் தாக்குதல்களை நடத்தினர் என மருத்துவர் ஜெனீவா மனித உரிமை ஆணைக்குழுவில் கூறியிருந்தார்.

இங்கிலாந்தில் உள்ள 'சனல் 4' தொலைக்காட்சியின் ஊடகத்தின் பணிப்பாளரான கெல்லம் மெக்ரே, மருத்துவர் துரைராஜாவை ஜெனீவா மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அழைத்துச் சென்றார் எனவும் அந்தச் சிங்கள இணையத்தளம் கூறியுள்ளது.

## மாணவனுக்கு பிணை அனுமதி

பொலிஸ் உத்தியோகத்தர் விபத்தில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சட்டத்துறை மாணவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தரிந்து ரத்வத்த எனும் 24 வயதுடைய மாணவரே இவ்வாறு நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்த பொலிஸ் உத்தியோகத்தர், பின்னர் விபத்தில் உயிரிழந்தார். இதனையடுத்து, விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் இந்த மாணவன் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பதுளை ரயில் தடம் புரண்டது

கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து பதுளை நோக்கி பயணித்த ரயில் ஒன்று தடம் புரண்டதில் மலையகத்திற்கான ரயில் சேவையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தினமும் காலை 9.30 மணிக்கு கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து பதுளை நோக்கி புறப்படும் ரயிலே இவ்வாறு பட்டிப்பளை பகுதியில் தடம் புரண்டுள்ளது.

மேலும் அப்பகுதி ஊடான ரயில் சேவையை வழமைக்கு கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை - ரூபாய் 500/-
முழு வர்ணம் - ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## குழப்பத்தின் வடிவம் கருணா

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி!' என்பார்கள்.

அப்படி ஒரு விவகாரத்தை கிளப்பி தேவையில்லாமல் வாங்கிக் கட்டும் நிலையை ஏற்படுத்தியிருக்கின்றார் முன்னாள் பிரதியமைச்சரும், முன்னாள் புலிகளின் கிழக்குத் தளபதியுமான விநாயகமூர்த்தி முரளிதரன்.

நாட்டை ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆதரவுடன் இந்தத் தேர்தலில் தமது தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் களமிறங்கியிருக்கிறார் கருணா.

'ஒரு நாள் இரவில் நாம் ஆனையிறவில் இரண்டாயிரம் முதல் மூவாயிரம் படையினரைக் கொன்று குவித்தோம்' என்று 'பீலா' விட்டிருக்கின்றார் கருணா.

எந்தத் தேவையும் – எந்த முகாந்திரமும் – இல்லாமல் இந்தக் கருத்தை கருணா வெளியிட்டிருக்கின்றார். அதனால் இத்தகைய கருத்தை வெளியட்டபோது அவர் என்ன மனநிலையில் இருந்தார் என்பதை ஒரு தடவை ஆராய்ந்து பார்ப்பதும் கூட கட்டாயமானதாகும்.

தமிழர்களின் – விடுதலைப் புலிகளின் – ஆயுதப் போராட்டத்தில் இணைந்து செயற்பட்ட கருணா அந்தப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்த கைங்கரியத்தின் பின் இன்றும் தென்னிலங்கையினால் – சிங்கள பேரினவாதிகளினால் – ஒரு துரும்பாகத் தன்னும் மதிக்கப்பட்பட்டு விட்டுவைக்கப் பட்டிருந்தார்.

விடுதலைப் புலிகளைக் காட்டிக் கொடுத்து, அந்த துரோகத்தில் அரசியல் பிழைப்பு நடத்துபவர் எங்ஙனம் அந்தப் போராட்டத்தின் பெருமைக்கு – அல்லது சாதனைக்கு – அல்லது குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வுக்கு உரிமை கோரமுடியும்?

முன்னர்தான் தமிழர்கள் மத்தியில் துரோகம் செய்பவர்களை 'காக்கை வன்னியன்' என்று அடை மொழி போட்டுக் குறிப்பிடும் வழக்கம் இருந்தது. இப்போது 'காக்கை வன்னியன்' என்ற அடைமொழி 'கருணா' என்றாகிவிட்டது.

அத்தகைய நபர் எவ்வாறு போராட்டகால பெறுபேறுகளுக்கு உரிமை கோரும் விதத்தில் 'அளப்புக்' கதைகளை எடுத்துவிட முடியும்?

ஆனையிறவுப் படைத்தளம் வீழ்ந்த போது அப்படி ஒரு இரவில் இரண்டாயிரம், மூவாயிரம் படையினர் உயிரிழந்தனர் என்ற தகவல் இல்லை. அப்படி நடந்திருந்தாலும் கூட அது போரியல் பெறுபேறு. யுத்தத்தின் விளைவான நடவடிக்கை. அது மறுதரப்பின் வெற்றியாகவோ, தோல்வியாகவோ, பாதிப்பாகவோ இருக்க முடியும்.

ஓர் இராணுவத்தில் இருந்து பதவி இறக்கிச் சீருடை கழற்றப்பட்ட ஒருவர், எப்படித் தனது பதவி நிலைப் பெயருக்கோ பிற விடயங்களுக்கோ உரிமை கோரத் தகுதியற்றவரோ, அது போன்ற நிலையில்தான் தமிழினத்தின் ஆயுதம் தாங்கிய போராட்டத்திற்குப் பெரும் துரோகியாகி ஆப்படித்த கருணாவும் இருக்கின்றார்.

ஒன்று – இத்தகைய அளப்பு கதைகளை அவிழ்த்து விடுவதற்குத் தகுதியோ, தகைமையோ உடையவர் அல்லர் கருணா.

அடுத்தது – அவரது இந்த வாய்ச் சவடால் பேச்சுக்களை செவிமடுத்து, அதற்கு முக்கியத்துவம் அளித்து, அதற்காக அவரை ஒரு மனிதராகக் கருதி வாக்களிக்கும் நிலையில் தமிழர்கள் இல்லை என்பது அறிந்த விடயம்.

மூன்றாவது – இந்தப் புரட்டல் பேச்சு தேவையில்லாமல் தெற்கு பேரினவாதிகளையும் சீற்றத்தில் ஆழ்த்தும் என்பது வெளிப்படையானது.

மொத்தத்தில் ஒட்டுமொத்தமாகத் தேவையற்ற வீண் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றார் அவர்.

கருணா பல சமயங்களில் என்ன பேசுகின்றோம், ஏது பேசுகின்றோம் என்று தெரியாமல் பிதற்றுவதுண்டு. அதன் ஓர் அங்கமாகவே இந்தப் பேச்சை பார்க்க வேண்டும்.

தன்னுடைய மோசமான தவறுகள், குற்றங்களுக்காக இயக்கத்தின் ஒழுங்கு நடவடிக்கைகள், தண்டனைகளுக்கு பயந்து, இயக்கத்தை விட்டு ஓடிக் காட்டிக் கொடுத்து, துரோகம் இழைத்து, தென்னிலங்கை அரசு மற்றும் படைத் தரப்புகளுடன் ஒட்டிக் கொண்டவர் கருணா. அவரை இணைத்ததால் பிரிவினையை வெற்றி கொண்டு ஐக்கியத்தை எட்டிவிடலாம் என்று அப்போது புளங்காகிதம் அடைந்தது கொழும்பு.

நல்லது. உண்மையில் புகுந்த இடத்தில் பிரிவினையை ஏற்படுத்துபவர் அவர். புலிகளை உடைத்தார். வடக்கு, கிழக்கு தமிழர்களிடையே பிரிவை ஏற்படுத்தும் முயற்சியில் தீவிரமாக உள்ளார்.

தமிழர்களையும் முஸ்லிம்களையும் நிரந்தர வைரிகளாக்கும் வேலையிலேயே எப்போதும் முனைப்பாக உள்ளார். இப்போது தனக்கு தஞ்சம் அளித்த தெற்குத் தீவிரப் போக்காளர்கள் மத்தியிலும் தமது தேவையற்ற அலட்டல் மற்றும் வீண் குழப்பங்களையும் ஏற்படுத்துகின்றார்.

மொத்தத்தில் குழப்பத்தின் வடிவம் கருணா.

# அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு கொண்டு வருவதில் சட்டச் சிக்கல்



மத்திய வங்கி பிணை முறி மோசடியின் பிரதான சூத்திரதாரியாகக் குற்றம் சுமத்தப்படும் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை நாட்டுக்கு கொண்டு வருவதில் நாடு கடத்தல் சட்டம் தடையாக இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிங்கப்பூருக்கும், இலங்கைக்கும் இடையில் கைதிகளை பரிமாறிக்கொள்ளும் உடன்படிக்கைகள் எதுவுமில்லை.

உடன்படிக்கை மூலமான கடப்பாடுகள் இல்லாத காரணத்தினால் சிங்கப்பூர் பிரஜை ஒருவர் இலங்கையில் செய்த குற்றம் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதில் சிரமமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து சிங்கப்பூர் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு உத்தியோகபூர்வமற்ற ரீதியில் அரசாங்கத்தின் உயர்மட்ட பிரதானி ஒருவருக்கு தெரியப்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

இருப்பினும் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் சட்ட சம்பிரதாயங்களுக்கு அமைய குற்றவாளிகளை பரிமாறிக்கொள்வது சம்பந்தமான ஏற்பாடுகள் இருக்கின்றனவா என்பது தொடர்பாக இரண்டு நாடுகளின் அரசாங்கங்களும் ஆராய்ந்து வருகின்றன.

அர்ஜுன் மகேந்திரன் சிங்கப்பூர் நாட்டின் நிரந்தர பிரஜையாக இருந்தாலும், தனது பெயரை மாற்றிக்கொண்டாலும் குற்றச்சாட்டில் இருந்து எந்த வகையிலும் தப்பிக்க முடியாது எனக் கூறப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் பிரஜையான அர்ஜுன் மகேந்திரன் வங்கித்துறையில் நிபுணத்துவம் பெற்ற அதிகாரி என்பதுடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்திலும் இலங்கை முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின் தலைவர் உட்பட முக்கிய அரச பதவிகளை வகித்து வந்தவர்.

அவரது பெற்றோர் இலங்கை அரச சேவை ஊழியர்கள் என்பதுடன் இவர் 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னரே சிங்கப்பூர் குடியுரிமையைப் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இம்முறை வாக்களிப்பு 10 மணி நேரம்

பொதுத்தேர்தலுக்கான வாக்களிப்பு நேரம் ஒரு மணிநேரத்தால் நீடிக்கப்படவுள்ளது என அறியமுடிகின்றது.

இதன்படி காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரை வாக்கெடுப்பு இடம்பெறலாம் என தெரியவருகின்றது.

வழமையாக காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை 9 மணிநேரமே வாக்களிப்புக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

எனினும், இம்முறை சமூக இடைவெளி உட்பட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தேர்தல் நடைபெறவுள்ளதாலேயே இந்த முடிவு எடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரிடம் வினவியபோது,

இன்னும் இறுதி முடிவெடுக்கப்படவில்லை. ஆனால், அதிகரிக்கவேண்டி வரலாம். – என பதிலளித்தார்.

# கொரோனாவை விட ஆபத்தான கருணாவின் கூற்றை குற்ற ஒப்புதலாக ஏற்று உடன் நடவடிக்கை எடுங்கள்!

## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மணிவண்ணன் வற்புறுத்து

யாழ்ப்பாணம், ஜூன்21

கிழக்கில் தமிழ் மக்களைக் கொன்று குவித்தும், விடுதலைப் போராட்டத்தை காட்டியும் கொடுத்த கருணா கொரோனாவை விட ஆபத்தானவர் தான் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

மூவாயிரம் இராணுவத்தை கொன்றார் எனக் கருணா கூறுவது குற்ற ஒப்புதல் வாக்குமூலமாக கொண்டு அவருக்கு எதிரான நடவடிக்கையினை கோட்டாபய அரசாங்கம் எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றுப் பிற்பகல் ஊடகவியலாளர் சந்திப்பு நடந்தது. இதன் போது அங்கிருந்த ஊடகவியலாளர்களால் ஓரிரவில் மூவாயிரம் இராணுவத்தைக் கொன்ற தான் கொரோனாவை விட ஆபத்தானவன் என்று கருணா கூறியமை தொடர்பில் எழுப்பபப்பட் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கருணா அம்மான் உண்மையைத்தான் சொல்லியுள்ளார். அவர் கொரோனாவை விட கொடூரமானவர்தான். 2004 ஆம் ஆண்டிற்கு பிற்பாடு கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களைக் கொன்று குவித்தத்தில், தமிழ் மக்களின் விடுதலை போராட்டத்தை காட்டிக் கொடுத்ததில், மிகக் கொடூரமாக செயற்பட்டவர் என்பது உண்மை. அதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

மஹிந்த ராஜபக்ஷ அரசுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் திராணியில், தான் பெரிய வீரன் போன்று மூவாயிரம் இராணுவத்தை கொன்றதாக கருத்து வெளியிட்டுள்ளார். உண்மையில் எந்தவித ஆதாரங்களும் இல்லாமல் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என்ற ஒன்றை மட்டும் அடிப்படையாக கொண்டே பல கைதிகள் தண்டனை பெற்றிருக்கின்றார்கள்.

பல அரசியல் கைதிகள் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு அவர்களுக்கு எதிரான வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எவ்வாறு பெறப்படுகின்றது என்றால் – பொலிஸ் உயர் அதிகாரிகள் அல்லது சாதாரண பொலிஸ் அதிகாரிகள் தாங்கள் விரும்பியவாறு வாக்குமூலத்தை எழுதி, அரசியல் கைதிகளிடம் வற்புறுத்தி கையெழுத்து வாங்குவார்கள்.

அதில் என்ன எழுதி உள்ளது என்பது கூட தெரியாமல், பயத்தினால் அரசியல் கைதிகள் கையெழுத்திடுவார்கள். அவர்கள் கையெழுத்திட்ட வாக்குமூலத்தை குற்ற ஒப்புதல் வாக்குமூலமாக மன்றில் சமர்ப்பித்து அவர்களுக்கு எதிரான வழக்கு நடாத்தப்படும்.

அரசாங்கத்தின் கைக்கூலியாக செயற்படும் கருணா அம்மான் உண்மையிலேயே குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தெரிவித்திருக்கின்றார். அரசியல் கைதிகள் மீதான வழக்குகளிலும், அவர்கள் அங்கு குண்டுவைத்தார்கள், இங்கே இராணுவத்தை கொலை செய்தார்கள், கிளைமோர் வைத்தார்கள் என்றுதான் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றது.

கருணா அம்மான் மிக தெளிவாகத் தான் மூவாயிரம் இராணுவத்தை கொலை செய்தார் எனச் சொல்லியுள்ளார். ஏன் அவர் மீது மஹிந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க தயங்குகின்றது? இதைக் குற்ற ஒப்புதல் வாக்குமூலமாகப் பதிவு செய்து கருணா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார்.

# விடுவிக்கப்பட்ட பிரதேச மக்களின் நிலைமை தெரியாமல் பேசக்கூடாது

## யாழ். இராணுவத் தளபதிக்கு சுரேந்திரன் பதில்



**இராணுவத்தினால் விடுவிக்கப்பட்ட காணிகளில் வாழ்ந்த மக்களின் நிலைமை தெரியாமல் யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத்தளபதி கருத்து தெரிவிக்கக் கூடாது என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தேசிய அமைப்பாளரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட வேட்பாளருமான குருசுவாமி சுரேந்திரன் பதிலளித்துள்ளார்.**

யாழ்ப்பாணம், அச்சுவேலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பேசிய யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய யாழ் மாவட்டத்தில் இராணுவத்தினால் பத்தாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் விடுவிக்கப்பட்டும் மக்கள் குடியேறவில்லை என கூறியிருந்தமைக்கு பதிலளிக்கும் முகமாக கூட்டமைப்பின் வேட்பாளர் சுரேந்திரன் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்:-

வலி வடக்கு உள்ளிட்ட யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் மக்களின் காணிகளை ஏறக்குறைய மூன்று தசாப்தங்களாக இராணுவம் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த காரணத்தினால் நிர்கதிக்குள்ளான மக்கள் தமது வாழ்வாதரங்களை இழந்து அகதிமுகாம்களில் அவல வாழ்வு வாழ்ந்துவந்த நிலையில் இராணுவத்தினால் விடுவிக்கப்பட்ட காணிகளில் எவ்வாறு உடனடியாகவே குடியேற முடியும் என்பதனையும், குறித்த காணிகளில் வாழ்ந்த மக்கள் காணிகளை விட்டுவிட்டு மேற்கத்தைய நாடுகளுக்கு சென்று பணம் சம்பாதிக்கவில்லை, இந்த நாட்டில் அகதிமுகாம்களில்தான் வாழ்ந்தார்கள் என்பதனையும் கட்டளைத்தளபதி உணர்ந்துகொள்ள வேண்டும்.

இராணுவம் தமது முகாம்களைவிட்டு வெளியேறிய போது பதிய இடத்தில் முகாம்களை அமைப்பதற்கு மீள்குடியேற்ற அமைச்சினூடாக நிதியை வழங்கிய அரசாங்கம் அந்த நிலத்தின் உரிமையாளர்களுக்கு வீடு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்திருந்தால் தமது பூர்வீக நிலங்களில் எமது மக்கள் குடியேறி நின்மதியாக வாழ்ந்திருப்பார்கள்.

ஏற்கனவே தமது வாழ்வாதார மூலமான நிலத்தை இழந்து அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் வாழ்ந்துவந்த மக்கள் தமக்கு வாழ்வாதாரத்தை ஈட்டித்தந்த நிலங்களை இழந்திருந்தமையினால் கூலி வேலைகளுக்கு சென்று தமது அன்றாட ஜீவனோபாயத்தை கவனிக்க முடிந்ததே தவிர அவர்களால் உடனடியாக ஒரு வதிவிடத்தை அமைத்துக் கொள்வதற்கான வங்கி மீதிகளை கொண்டிருக்கவில்லை.

ஏற்கனவே தமது வாழ்வின் பெரும்பகுதியை நில மீட்பு போராட்டத்தில் செலவுசெய்த மக்கள் பொருளாதாரத்தில் பின்னடைவை சந்தித்திருந்த நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இராஜதந்திர நகர்வுகளின் பயனாக கடந்த ஆட்சிக்காலத்தில் காணிகள் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் காணிகள் விடுவிக்கப்பட்ட குறுகிய காலத்தில் கடந்த ஆண்டில் சஹறான் குழுவின் தீவிரவாத தாக்குதலினால் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் அதனைத்தொடர்ந்து இந்த ஆண்டு கொரோனா வைரஸ் தாக்கம் என நாடு இயல்பு நிலையை இழந்திருந்த காரணத்தினால் கூலித்தொழில்களையே இழந்திருந்த மக்கள் எவ்வாறு மீள்குடியேற வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்?

இவற்றை கருத்திற்கொள்ளாமல் யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி வெளியிட்டுள்ள கருத்து யதார்த்தத்திற்கு முரணானது. இவரது இந்த கருத்தில் இராணுவம் தம்வசமுள்ள மீதியாகவிருக்கும் பொதுமக்களின் காணிகளை விடுவிக்காமல் தவிர்ப்பது அல்லது காணிகளை கையகப்படுத்தும் உள்நோக்கம் கொண்டதாக இருக்குமோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

பெரும் போராட்டங்களின் பின்னர் விடுவிக்கப்பட்ட தமது பூர்வீக நிலங்களில் எமது மக்கள் முழுமையாக குடியேறி வாழ்வை தொடர்வார்கள். அவர்களின் தற்போதைய நிலையை உணராத கருத்துக்களை கூறுவது விசமத்தனமானது என்பதுடன் எமது மக்களின் இந்த நிலைக்கு காரணமானவர்களே தற்போது இப்படியான கருத்து தெரிவிப்பது வேடிக்கையானதே. - எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இராணுவத்தைச் சேர்ந்த 71 பேருக்கு பதவி உயர்வு

இராணுவத்தைச் சேர்ந்த 71 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கேர்ணல் தரத்திலுள்ள 41பேர் பிரிகேடியர்களாகவும், லெப்டினன்ட் கேர்ணல் தரத்திலுள்ள 30 பேர் கேர்ணல்களாகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர் என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவின் வேண்டுகோளுக்கு அமைய, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இப்பதவிஉயர்வுவழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

## கணவனும் மனைவியும் மின்சாரம் தாக்கிச் சாவு

மின்சாரம்தாக்கியதில்கணவனும் மனைவியும் உயிரிழந்த பரிதாபச் சம்பவம் களுத்துறையில் இடம்பெற்றுள்ளது.

தொடங்கொட பொலிஸ்பிரிவுக்குட்பட்ட ஹட்டன்கல, நேஹின்ன பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அவர்கள் சட்டவிரோத மின்கம்பியில் சிக்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அதேயிடத்தைச் சேர்ந்த 68 வயதுடைய கணவனும், அவருடைய 63 வயதுடைய மனைவியும் சம்ப வத்தில் உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தொடங்கொட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கார் ஜன்னலினால் தலையை நீட்டிய 3வயதுக் குழந்தை விபத்தில் மரணம்

இரத்தினபுரி - பெல்மடுல்ல பிரதான வீதியின் திப்பிடிகல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 03 வயது ஆண் குழந்தையொன்று பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை வேகமாக பயணித்த காரை பஸ் ஒன்று முந்திச் செல்ல முற்படுகையிலேயே விபத்து சம்பவித்துள்ளது.


காரில் பயணித்த 3 வயது ஆண் குழந்தையொன்று சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளது.

காரில் பயணித்த குறித்த குழந்தை ஜன்னல் வழியாக தலையை வெளியே இட்டு வந்துள்ள நிலையிலேயே விபத்து இடம்பெற்றுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பெல்மடுல்ல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்

## வயோதிபரை கௌரவித்த பிரதமரும் ஜனாதிபதியும்!





கொவிட் - 19 நிதியத்திற்காக பிரதமருக்கு ஐயாயிரம் ரூபாவை அனுப்பி வைத்த முதியவருக்கு, நேரடியாக அதனை ஜனாதிபயிடம் கையளிக்கும் வாய்ப்பை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

மெதிரிகிரியவைச் சேர்ந்த முன்னாள் கிராம சங்க உறுப்பினர் எஸ்.பி.ஹேவாஹெட்ட (வயது - 86) அண்மையில் அலரி மாளிகைக்கு ஐயாயிரம் ரூபா பணத்தாள் சகிதம் கடிதமொன்றை அனுப்பிவைத்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கைகளுக்கு கிடைக்கும் வகையில் அந்தப் பணமும் கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இதனை ஹேவாஹெட்ட அவர்கள் நேற்று முற்பகல் தமது கைகளினாலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளார்.

ஒரு மூத்த குடிமகனாக சமூக பொறுப்பை ஏற்று குறித்த பணத்தை அனுப்பிவைத்த ஹேவாஹெட்டவின் தாராள மனப்பான்மையை கௌரவிக்க வேண்டுமென கருதிய பிரதமர் ஹேவாஹெட்டவின் கைகளினாலேயே அதனை ஜனாதிபதியிடம் கையளிக்க ஏற்பாடு செய்யுமாறு பிரதமரின் செயலாளர் காமினி செனரத்துக்கு அறிவுறுத்தியிருந்தார்.

அதனடிப்படையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிறந்தநாளான நேற்று மிரிசவெட்டிய புனித பூமியில் இடம்பெற்ற தானம் வழங்கும் நிகழ்வின்போது, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் ஹேவாஹெட்ட அவர்கள் குறித்த நிதியை கொவிட் - 19 நிதியத்திற்காக ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார்.

இதன்போது ஹேவாஹெட்ட அவர்களின் குடும்பத்தாரும் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir



## சூரிய கிரகணத்தால் கொரோனா அழியாது

இன்று சந்திரன் சூரியனை மறைப்பதால் சூரியன் வளையம் போன்று தோன்றும். சூரியனுக்கும் பூமிக்கும் இடையே சந்திரன் வரும்போது இது நிகழும். இந்தச் சூரிய கிரகணம் கொரோனா வைரஸை முடிவுக்குக் கொண்டு வரும் என்று வாந்திகள் பரவியுள்ளன.

இந்த வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார் இந்திய வானியல் அமைப்பின் மக்கள் தொடர்பு மற்றும் கல்விக்குழு தலைவர் அனிகெட் சூலே. சூரிய கிரகணம் என்பது சந்திரன் சூரியனை மறைக்கும் ஒரு நிகழ்வு. சூரிய கிரகணங்களுக்கும் பூமியில் இருக்கும் நுண்ணுயிரிகளுக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை, கிரகணம் நுண்ணுயிரிகளைப் பாதிக்காது.

அதே போல் அந்தத் தருணத்தில் உணவு உட்கொள்வதால் எந்த ஆபத்தும் இல்லை. கிரகணத்தின் போது சூரியனிலிருந்து எந்த ஒரு புதிரான கதிர்களும் வெளியே வருவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

## ‘வந்தே பாரத்’ வானூர்தித் திட்டம் லட்சம் பேர் இந்தியா திரும்பினர்

’வந்தே பாரத்’ திட்டத்தின் கீழ் வானூர்திகள் மூலம் இதுவரை ஒரு லட்சத்துக்கும் அதிகமான இந்தியர்கள் நாடு திரும்பியுள்ளனர் என்று இந்தியாவின் பொது வானூர்திப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்தது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் சிக்கிய இந்தியர்களை எயார் இந்தியா வானூர்திகள் மூலம் இந்தியாவுக்குக் கொண்டு செல்வதற்காக இந்திய அரசு கொண்டு வந்த இந்தத் திட்டத்தின் கீழ், துபாய், மஸ்கட், சிங்கப்பூர், மாலே வேலனா ஆகிய இடங்களில் இருந்து தற்போது 1லட்சத்துக்கு அதிகமான இந்தியர்கள் தற்பேது நாடு திரும்பியுள்ளனர். கொரோனாத் தொற்றுக் காரணமாகக் கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதிமுதல், இந்தியாவில் பன்னாட்டு வானூர்திச் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீன அதிபரின் உருவம் எரிப்பு

எல்லையில் நடந்த மோதலில் இந்தியச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்து இந்தியாவின் இமாச்சாலப் பிரதேசம் தரம்சாலாவில் போராட்டம் நடந்தது. அந்தப் போராட்டத்தில் சீன அதிபர் ஜி ஜின்பிங்கின் உருவப் பொம்மை எரிக்கப்பட்டது.

மேற்கு வங்கம் – அசனால் பகுதியில் பா.ஜ.க. தொண்டர்கள் சிலர் ’சீனாவைப் புறக்கணிப்போம்’ என்று கோசமிட்டுக்கொண்டே வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னின் உருவபொம்மையை எரித்தமை கேலிக்குள்ளாகியிருந்த நிலையில், தற்போது சீன அதிபரின் உருவப் பொம்மை எரிக்கப்பட்டிருக்கிறது. சீனப் பொருள்களைப் புறக்கணிக்க வேண்டும், சீனப் பொருள்களுக்குத் தடை விதிக்க வேண்டும் என்ற வாசகம் எழுதப்பட்ட அட்டைகளையும் இந்தப் போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்தியா – சீனா எல்லைக் கைகலப்பில் இந்திச் சிப்பாய்கள் சாவடைந்ததையடுத்து இந்தியாவில் சீனாவுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.










வட இந்தியப் பெருங்கடற் பகுதியில் ஈரானால் தயாரிக்கப்பட்ட புதிய ஏவுகணைகளை அந்த நாட்டுக் கடற்படை வெற்றிகரமாக ஏவியது. குறுகிய, நீண்ட தூர இலக்குகளைத் தாக்க வல்ல இந்த ஏவுகணைகள் கப்பல்களின் தளங்களிலிருந்தும் தரையிலிருந்தும் ஏவப்பட்டன.

## பாடகர் ராகவன் நேற்று மறைவு



தென்னிந்தியாவின் புகழ்பெற்ற பின்னணிப் பாடகர் ஏ.எல்.ராகவன் காலமானார். உடல்நிலை பாதிப்புக் காரணமாகக் காலமடைந்த அவருக்கு வயது 87. அய்யம்பேட்டை லட்சுமணன் ராகவன் என்ற பெயருடைய இவர் பாடகராக அனைவராலும் அறியப்பட்டவர்.

‘புதையல்’ படத்தில் சந்திரபாபுவுடன் இணைந்து ‘ஹலோ மை டியர் ராமி’ என்ற பாடல், அடுத்த வீட்டு பெண் படத்தில் ’தக்கார் நிறைந்த சங்கமிது’ என்ற பாடல், ‘பார்த்தால் பசி தீரும்’ படத்தில் ’அன்று ஊமைப் பெண்ணல்லோ’ ‘நெஞ்சில் ஓர் ஆலயம்’ படத்தில் ‘எங்கிருந்தாலும் வாழ்க’, இருவர் உள்ளம் படத்தில் ‘புத்தி சிகாமணி பெத்த புள்ள’, வேட்டைக்காரன் படத்தில் ‘சீட்டுக்கட்டு ராஜா’, பூவா தலையா படத்தில் ’போடச்சொன்னா போட்டுக்கறேன்’ என்று பல தனித்துவம் மிக்க பாடல்களைப் பாடியவர். புகழ்பெற்ற நடிகையான எம்.என்.ராஜம் அவரது மனைவி என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சுட்டு வீழ்த்தப்பட்டது ’ட்ரோன்’ பாகிஸ்தானுடையது என்று தெரிவிப்பு



சர்வதேச எல்லை வழியாக இந்திய எல்லைக்குள் நுழைந்த பாகிஸ்தான் நாட்டின் உளவு ட்ரோனை எல்லைப் பாதுகாப்பு படையினர் சுட்டு வீழ்த்தினர் என்று இந்தியத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஜம்மு காஷ்மீரின் கதுவா மாவட்டம் ஹிராநகர் செக்டாரில் உள்ள ரதுவா பகுதியில் உள்ள வயல்வெளியில் இந்த ட்ரோன் வீழ்த்தப்பட்டது. அந்த ட்ரோனை அதிகாரிகள் கைப்பற்றி ஆய்வு செய்தனர்.

அப்போது அதில் இருந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பான விரிவான அறிக்கையை எல்லைப் பாது காப்பு படை வெளியிட உள்ளது.

எல்லைப்பகுதியில் உள்ள இந்தியச் சிப்பாய்களைக் கண்காணித்து, பாதுகாப்பு இல்லாத இடங்களில் ஆயுததாரிகளை ஊடுருவச் செய்வதற்காகப் பாகிஸ்தான் இராணுவத்தினர் இதுபோன்று ட்ரோன்களைப் பயன்படுத்தி உளவு பார்க்கின்றனர் என்று இந்தியத் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## சீனாவுக்குத் தாரை வார்த்த மோடி

### ராகுல் காந்தி காட்டம்



சீனாவின் ஆக்கிரமிப்புக்குப் பயந்து பிரதமர் நரேந்திர மோடி இந்திய நிலப்பகுதியைச் சீனாவிடம் ஒப்படைத்துவிட்டார் என்று தெரிவித்துள்ளார் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரான ராகுல் காந்தி.

இது குறித்து அவர் தனது கீச்சகப் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:–

அது சீனாவின் நிலப்பகுதி என்றால், நம்முடைய இராணுவச் சிப்பாய்கள் ஏன் கொல்லப்பட்டார்கள்? எங்கு கொல்லப்பட்டார்கள்? என்று கேள்வி எழுப்பினார். இந்தியா – சீனா இடையே ஏற்பட்ட மோதல் குறித்து அனைத்துக் கட்சியினருடனும் காணொ லிக் காட்சி வழியாக நடைபெற்ற கூட்டத்தில் பேசிய மோடி ‘சீனா நமது எல்லைக்குள் ஊடுருவவில்லை; நமது நிலையையும் கைப்பற்றவில்லை.

எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் சீனாவின் நடவடிக்கை ஒட்டு மொத்த தேசத்தையும் காயப்படுத்தியுள்ளது. நாட்டின் ஒரு அங்குல நிலத்தின் மீது கூட யாரும் கண் வைக்க முடியாத அளவிற்கு நமது படைபலம் உள்ளது. நமது நாட்டை பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை நமது ஆயுதப்படை மேற்கொள்ளும்.

ஒரே சமயத்தில் பல முனைகளுக்கும் செல்லக்கூடிய திறன் நாட்டின் ஆயுதப்படைகளுக்கு உள்ளது’ – என்று கூறினார். இந்த நிலையிலேயே ராகுல்காந்தி இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். இந்த மோதலில் என்ன நடந்தது என்ற முழு விவரத்தையும் அரசு தெரியப்படுத்தவில்லை என்பது எதிர்க் கட்சிகளின் குற்றச்சாட்டு ஆகும்.

# பிரிட்டன் பிரதமரை சந்திக்க வலியுறுத்திப் போராட்டம்!




லண்டனில் கறுப்பினத்தவர்களுக்கு நீதி கோரிப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் போராட்டக் குழுவின் தலைவர்களில் ஒருவரான நடிகை இமார்ன் அய்டன் என்பவரைப் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சனைச் சந்திக்க வலியுறுத்திப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் இனச் சமத்துவமின்மையைக்கண்டறியும்புதியஆணையகத்தை வழி நடத்த அரசியல் ஆலோசகரைத் தெரிவு செய்வதைப் போரிஸ் ஜோன்சன் கைவிட வேண்டும் என்றும் கோரப்பட்டது.

ஒவ்வொரு போராட்டங்களிலும் 20ஆயிரம் பேரை வழிநடத்தும் நபர் நான். போரிஸ் ஜோன்சனைத் தவிரமற்றஅனைவரும்என்னுடன் தொடர்பு கொண்டனர் என தெரிகிறது.நான்அவருடன்உரையாடவிரும்புகிறேன் அவருடைய மனதில் இந்தப் பிரச்சினை குறித்து என்ன இருக்கிறது என்று அறியவேண்டும் என்று 29 வயதான நடிகை இமார்ன் அய்டன் கூறினார், இந்தக் கோரிக்கையைச் செவிமடுக்குமாறு வலியுறுத்தி நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக் காரர்கள் லண்டனின் ஹைட் பூங்காவில் கூடியிருந்தனர். அய்டனின் கோரிக்கைகள் குறித்து உடனடியாகப் பிரிட்டன் தரப்பில் கருத்துகள் எவையும் தெரிவிக்கப்படவில்லை.

## ஹொங்கொங் கலகக்காரர்களுக்கு இடமளிப்பது தாய்வானுக்கு ஆபத்து

ஹொங்காங்கிலிருந்து வெளியேறுகின்ற கலகக்காரர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது தாய்வானின் மக்களுக்கு ஆபத்தை விளைவிப்பதாக அமையும் என்று சீனா தெரிவித்தது.

அத்தோடு ஹொங்கொங் வாசிகளுக்கு உதவுவதற்கான தாய்வானின் திட்டங்களுக்குச் சீனா தனது கண்டனத்தைத் தெரிவித்தது. சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமன ஹொங்கொங்கில் சீனா அரசின் பிடி இறுக்கமடைந்து வருகிறது.

சீனாவின் ஆக்கிரமிப்பை எதிர்த்துக் ஹொங்கொங் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். இந்த நிலையி ஹொங்கொங்கிலிருந்து வெளியேற நினைப்பவர்களுக்கு உதவுவதற்காக ஒரு பிரத்தியேக அலுவலகத்தை அமைக்கவுள்ள தாகவும், அவர்களை அரவணைக்கவுள்ள தாகவும் தாய்வான் தெரிவித்தது.

இந்த நிலையிலேயே ஹொங்கொங்கில் குழப்பத்தை ஏற்படுத்தும் கலகக்காரர்குளக்குத் தங்குமிடம் வழங்குவது தாய்வான் மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று சீனா தெரிவித்துள்ளது.

## இனவெறி குறித்து விசாரணை ஐக்கிய நாடுகள் சபை தீர்மானம்

அமெரிக்கப் பொலிஸாரின் பிடியில் ஜோர்ஜ் ஃபிளாய்ட் உயிரிழந்ததன் எதிரொலியாக ஐ.நா. மனித உரிமைகள் சபை பாரபட்சம் காட்டுகின்ற, வன்முறையில் ஈடுபடுகின்ற பொலிஸாரைக் கண்டித்தது. அத்தோடு ஆபிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த மக்களுக்கு எதிராக நடக்கின்ற இனவெறி குறித்த அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டது.

47 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நாவின் ஒரு மன்றம் ஆபிரிக்க நாடுகள் கொண்டுவந்த இது குறித்த தீர்மானத்தை ஒருமனதாக ஏற்றுக் கொண்டது. இனவெறிக்கு எதிரான அமைதிப் போராட்டங்களின்போது நடந்த வன்முறைகள் குறித்து ஆராய்வதற்கும், போராட்டங்களை ஒடுக்கியமை குறித்தும் ஒரு வருட காலத்துக்குள் ஆதாரங்களுடன் கண்டுபிடித்து வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் மைக்கல் பச்லெட் கோரியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை தனது வேலையைச் செய்ய வேண்டும். அமெரிக்காவை பொறுப்புக்கூற வைக்க வேண்டும் என்று ஆபிரிக்க நாடுகள் கொண்டுவந்த மேற்படித் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

## கொரோனாவை கண்டுபிடிக்க பீஜிங்கில் கடும் சோதனை



சீனாவின் தலைநகர் பீஜிங்கில் 2ஆம் அலையாக அதிவேகமாகப் பரவிவருகின்ற கொரோனா வைரஸைத் தடுப்பதற்குக் கடும் முயற்சிகளைச் சீனா அரசு மேற்கொண்டுவருகின்றதுஎன்றுதெரிவிக்கப்படுகிறது.

அங்கு உணவு மற்றும் பொதிகள் விநியோக ஊழியர்கள் அனைவருக்கும் நியூக்ளிக் அமிலச் சோதனை களை மேற்கொண்டு வருவதாகச் சீனா தெரிவித்துள்ளது.

ஒரு வாரத்துக்கு முன்பு அங்குள்ள உணவுச் சந்தைகளுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் 2ஆம் அலையாகக் கொரோனா பரவ ஆரம்பித்ததிலிருந்துப் பீஜிங் அதிகாரிகள் அங்குள்ள நகரங்களில் சோதனைகளை விரிவுபடுத்தி வருகின்றனர்.

ஆரம்பத்தில் ஜின்ஃபாடி சந்தைக்கு அருகிலுள்ள குடியிருப்புப் பகுதிகள் மற்றும் அங்கு பணிபுரிந்தவர்கள் சந்தைக்கு வந்தவர்கள் என அனைவரும் பரிசோதனைக்குட்படுத்தப்படுகிறார்கள். பல்லாயிரக்கணக்கான உணவு விநியோகப் பணியாளர்கள், பொதிகள் சேவையினர் அனைவரும் தற்காலிகமாகக் கடமையில் இருந்து வெளியேற்றப்படுவார்கள் என்றும், நியூக்ளிக் அமிலச் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் 14 நாள்கள் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 10ஆண்டுகள் இடைவெளியில் பிறந்த இரட்டையர்கள்!

இரட்டைக் குழந்தைகளில் முதல் குழந்தை பிறந்து 10 ஆண்டுகள் கழித்து மற்றொரு குழந்தை பிறந்தமை அதிசய நிகழ்வாக பார்க்கப்படுகிறது. சில நிமிடங்கள் வித்தியாசத்தில் இரட்டைக் குழந்தைகள் பிரசவமாவதே வழமை. ஆனால் ஒரே கருவில் உருவான ஒரு குழந்தை பிறந்து பத்தாண்டுகள் கழித்து அடுத்த குழந்தை பிறந்துள்ளது. இந்தச் சம்பவம் சீனாவில் நிகழ்ந்துள்ளது. சீனாவை சேர்ந்த வாங் (வயது 41) என்ற பெண்மணி சோதனைக் குழாய் முறையில் 2010ஆம் ஆண்டு ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தார். பின்னர் பத்தாண்டுகள் கழித்து அதே மருத்துவமனையில் சேமிக்கப்பட்டிருந்த அவரது கருமுட்டைகளில் இருந்து பத்து வருடங்களுக்குப் பின்னர் தற்போது மற்றொரு குழந்தையைப் பெற்றுள்ளார். இதன்படி இந்தக் குழந்தைகள் இரண்டும் பத்தாண்டுகள் வித்தியாசத்தில் பிறந்த இரட்டையர்கள் என்கிறார்கள்.

## துருக்கி தோற்றுவிட்டது துருக்கி அதிபர் தெரிவிப்பு

கொரோனாவுக்கு எதிரான போரில் துருக்கி தோற்றுவிட்டது என்று துருக்கி அதிபர் எட்டோகன் தெரிவித்தார். இதுகுறித்து எர்டோகன் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் அதிகரித்துள்ள கொரோனா தொற்று எண்ணிக்கையைப் பார்க்கும்போது நாம் கொரோனாவுக்கு எதிரான போரில் தோற்றுவிட்டோம் என்பதைக் காட்டுகிறது. ஆனால், வரும் மாதங்களில் சமூக இடைவெளியைப் பின்பற்றிக் கொரோனாவை நமது நாட்டிலிருந்து விலக்குவோம். மக்களைப் பாதுகாத்து வருடத்தின் இரண்டாம் பகுதியில் பொருளாதாரத்தை மீட்டெடுப்போம் - என்றார்.

துருக்கியில் கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. எனினும் கடந்த சில நாள்களாகத் துருக்கியில் கொரோனாத் தொற்று கணிசமான அளவு அதிகரித்து வருகிறது. துருக்கியில் இதுவரை 1இலட்சத்து 85ஆயிரத்து 245 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். 4ஆயிரத்து 905 பேர் உயிரிழந்துள்ளனர் என்பவை குறிப்பிடத்தக்கன.

## அபுதாபியில் வன்னி மரங்கள்!

அபுதாபியில் உள்ள அல் தப்ரா பாலைவனப் பகுதியில் அந்த நகர மாநகராட்சி சார்பில் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வன்னி மரக்கன்றுகள் நடப்பட்டிருக்கின்றன.

அபுதாபியில் பல்வேறு பகுதிகளில் மாநகராட்சி சார்பில் மரக்கன்றுகள் நடப்பட்டுப் பசுமைப் பகுதிகளாக மாற்றப்பட்டு வருகிறது. இதில் கடுமையான வறட்சியைத் தாங்கும் வன்னி மரக்கன்றுகள் பாலைவன மண்ணில் நடப்பட்டு வருகின்றன. மேற்காசியாவிலும், தெற்காசியாவிலும் காணப்படுகின்ற வன்னி மரங்கள் அவரை இனத்தைச் சேர்ந்த பூக்கும் மரமாகும்.

கிட்டத்தட்ட 400 ஆண்டுகளுக்கும் முந்தைய பழமையான இந்த மரங்கள் பஹ்ரைன் நாட்டின் பாலைவனங்களில் உள்ளன. அதனை அடுத்து அமீரக பாலைவனம் மற்றும் வனப்பகுதிகளில் இந்த மரம் அதிகமாக காணப்படுகிறது. தண்ணீர் கிடைக்காத இடங்களில் கூட இந்த மரங்கள் செழிப்பாக வளருகின்றன. அதனால்தான் வறட்சியான பகுதியான அபுதாபி இந்த மரத்தை நாட்டி வருகிறது.



காலைக்கதிர்
Kalaikkathir

# பக்திமிக்க இந்துவாக உங்கள் நடவடிக்கைகளால் கவலை!

## கோட்டாவிற்கு காட்டமாக கடிதமெழுதிய சம்பந்தன்



அப்போதைய இந்திய பிரதம மந்திரி ஸ்ரீ சரன் சிங் திருக்கோணேஸ்வரத்திற்கு வருகை தந்தார். அவரது வருகையின் போது அப்பகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் நானும் திருக்கோணேஸ்வரத்தில் அவரை வரவேற்றவர்களுள் ஒருவராக இருந்தேன். அவர் வந்ததும் வாகனத்திலிருந்து இறங்கியபோது அவர் கூறிய வார்த்தைகள் நான் தட்சண கைலாயத்திற்கு வந்துள்ளேன்" என்பதாகும். நான் சிவபெருமானின் தெற்கு உறைவிடத்திற்கு வந்துள்ளேன் என்பது அதன் பொருளாகும். சிவபெருமானின் வடக்கு உறைவிடம் உத்திர கைலாசம். இந்தியாவின் வடக்கே உள்ள இமயமலையாகும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இவ்வாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

'புத்த பெருமான் ஆதிக்கக் கொள்கையைப் போதிக்க அல்லது பிரயோகிக்கவில்லை என்பது அவரின் பெயரால் தற்போது அதனைப் பின்பற்ற முனையும் சம்பந்தப்பட்ட அனைவரினாலும் நினைவில் கொள்ளப்பட வேண்டும். அவரைப்பின்பற்றுவதாகக்கூறிக்கொள்பவர்களினால் அவரது போதனைகள் பின்பற்றப்பட்டால்,



இலங்கை அமைதியும் சமாதானமும் நிறைந்த ஒரு சொர்க்கபூமியாகத்திகழும்' அ என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு, இரா.சம்பந்தன் அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் முழுமையான விவரம் வருமாறு :-

மேதகு ஜனாதிபதி அவர்களே,

2020 ஜூன் 02 ஆம் திகதிய 2178/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பிரகடனத்திற்கமைய கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் மரபுரிமையின் முகாமைத்துவத்திற்காக ஜனாதிபதி செயலணி யொன்றைத் தாபித்தல்

மேற்காணும் விடயம் தொடர்பாக நான் இக்கடிதத்தை எழுதுகின்றேன்.

முதலாவதாக நான் பின்வரும் கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்:

1. இலங்கை ஒரு பல்லின, பன்மொழி, பல்மத, பல்கலாசார பன்மைத்துவ சமூகமாகும்.

2. இலங்கை ஒன்பது (9) மாகாணங்களைக் கொண்டது; கிழக்கு மாகாணம் அவற்றுள் ஒன்றாகும்.

3. கிழக்கு மாகாணம் எப்போதும் தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்தபோதும் அது ஒரு பல் இன மாகாணமாகவே இருந்து வருகிறது.

4. இச்செயலணி அதன் உறுப்பினர் ஆக்க அமைவில் அதுமுழுக்க சிங்கள மயமானதாக உள்ளது. அதன் உறுப்பினர் உள்ளடக்க விதமானது அது ஒரு சமூகத்தினதும் – சிங்கள சமூகம் – ஒரு மதத்தினதும் – பௌத்தம் – நலன்களுக்கு மாத்திரம் சேவையாற்றுவதற்கெனவே ஏற்படுத்தப்பட்டதென்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அவர்கள் நாட்டின் பெரும்பான்மையினர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

5. ஏனைய மாகாணங்கள் இதில் சேர்க்கப்படாது விடுபட்டதேன், ஏனைய சமூகங்களும் ஏனைய மதங்களும் இதில் உள்ளடக்கப்படாது விடுபட்டதேன் என்ற கேள்வியை எழுப்புவது பொருத்தமானதாகவிருக்கும்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மட்டுமின்றி முழு நாட்டிலும் தமிழ் மக்கள் கொண்டுள்ள ஆழமான வேர் காரணமாக, ஓர் இலங்கையர் என்ற வகையிலும் ஒரு பக்திமிக்க இந்து என்ற வகையிலும் எனது கவலைகள் தூண்டப்படுகின்றன.

பிரபல இலங்கை வரலாற்றாசிரியர் பி.ஈ. பீரிஸ் விஜயனின் வருகைக்கு வெகு காலத்திற்கு முன்னரே இலங்கையில் முழு இந்தியாவினதும் போற்றுதலைப் பெற்ற சிவபெருமானின் பஞ்ச ஈஸ்வரங்கள் காணப்பட்டன. அவை மகாதித்தவிற்கு அருகில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வரம், சிலாவத்த மற்றும் பேல் பிரி பகுதிகளில் தலைநிமிர்ந்து நிற்கும் முன்னீஸ்வரம், மாந்தோட்டத்திற்கருகில் அமைந்துள்ள தொண்டேஸ்வரம், கொட்டியார் பெரும் வளைகுடாவிற்கு எதிரே அமைந்துள்ள திருக்கோணேஸ்வரம் மற்றும் காங்கேசந்துறைக்கு அருகில் அமைந்துள்ள நகுலேஸ்வரம் ஆகியனவாகும். ஏன்று தனது வரலாற்று நூல்களில் குறிப்பிட்டுள்ளார். இவ்வீஸ்வரங்களுள் இரண்டு வட மாகாணத்திலும் ஒன்று கிழக்கு மாகாணத்திலும் ஒன்று மேல் மாகாணத்திலும் இன்னொன்று தென் மாகாணத்திலும் அமைந்துள்ளன. புகழ்பெற்ற இவ் வரலாற்றாசிரியர் பி.ஈ. பீரிஸின் கூற்றுப்படி முழு இந்தியாவிலும் போற்றுதலுக்குரியதான சிவ ஈஸ்வரங்கள் விஜயனின் வருகைக்கு வெகு காலத்திற்கு முன்னரே இலங்கையின் பல பாகங்களிலும் காணப்பட்டன என்பது குறிப்பிடத் தகுந்ததாகும். விஜயன் சிங்கள இனத்தின் முன்னோடியாகக் கருதப்படுகிறார்.

இப்பிரகடனம் கிழக்கு மாகாணம் தொடர்பானதாகையால், கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலையில் அமைந்துள்ள சிவபெருமானின் ஈஸ்வரமான திருக்கோணேஸ்வரம் பற்றி நான் தற்போது குறிப்பிடுகின்றேன். திருக்கோணேஸ்வரம் புராணங்களில் தட்சண கைலாசமெனக் குறிப்பிடப்படுகிறது. பிரசித்திபெற்ற இச்சிவாலயம் மூன்று கோபுரங்களைக் கொண்டிருந்தது. கடலை நோக்கிய இரு புறங்களிலும் ஒவ்வொன்றும், மற்றொன்று தற்போது பிரடெரிக் கோட்டை அமைந்துள்ள இடமான மத்தியிலும் அமையப்பெற்றிருந்தன. பிரதான மண்டபம் ஆயிரம் (1000) தூண்களைக் கொண்டிருந்ததாக நம்பப்படுகிறது. போர்த்துகேயர் காலத்து மத குருவும் வரலாற்றாசிரியருமான அருட்தந்தை கீறொஸ் தனது நூலில் ட்றிக்குயிலிமலே கோபுரம் அக்காலத்தில் கீழைத்தேய பக்தர்களின் ரோமாபுரியாக விளங்கியது என்பதோடு, அக்காலத்தில் பக்தர்களினால் மிக அதிகமாக தரிசிக்கப்பட்ட சியோலாவோ கடற்படுகைகளுக்கு (Shoals of Chiolao), அருகில் அமைந்துள்ள ராமனாகொயர் (Ramanacoir), நாகபட்டாவோவிலிருந்து (Nagapatao) எட்டு காதவழி தொலைவில் இருந்த சிலாவாராவோ (Xilavarao), எஸ்.தோம் மற்றும் ட்றிப்பிட்டியிலிருந்து (Tripiti) இரு நாள் பயணத் தொலைவில் அமைந்திருந்த காஞ்சவராவோ (Canjavarao) மற்றும் பிஸ்நாகாவிலிருந்த (Bisnaga), ட்றெமெல் (Tremel), ஒரிசாவிலுள்ள ஜகர்ப்பதி (Jagarpati) மற்றும் வங்காளத்தில் அமையப்பெற்ற விக்சாண்டே (Vixante) ஆகியவற்றைவிட மிக அதிகமான அளவில் பக்தர்களினால் தரிசிக்கப்பட்டது என்று குறிப்பிடுகிறார்.



தென் இந்தியாவில் அமைந்துள்ள பிரசித்திபெற்ற தலங்களைவிட மிக அதிகமாக கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேஸ்வரம் பக்தர்களினால் மதித்து தரிசிக்கப்பட்டதென்ற கத்தோலிக்கப் பாதிரியார்ஃவரலாற்றாசிரியர் ஒருவரின் இக்கூற்று இவ்வாலயம் எவ்வளவு பிரசித்தி பெற்றதாக விளங்கியதென்பதை நிரூபிக்கின்றது. கி.பி. 1622 ஆம் ஆண்டு போர்த்துகீச தேசாதிபதி கொன்ஸ்டாண்டின் டீ சா திருகோணமலைக் கோட்டையைக் கைப்பற்றிய போது திருக்கோணேஸ்வர ஆலயம் அவரால் ஈவிரக்கமற்ற முறையில் அழிக்கப்பட்டது. இக் கோவிலிலிருந்து உடைத்தெடுக்கப்பட்ட கட்டிடப் பொருள்கள் அதே இடத்தில் பிரெட்ரிக் கோட்டையைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. இக் கோவிலின் கற்பாலங்கள் (Stone slabs) இன்னும் இப் பகுதியில் காணப்படுவதோடு, அருகிலுள்ள கடலிலும் தாழ்ந்துள்ளன.

ஜே.ஆர். ஜெயவர்தன ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் அப்போதைய இந்திய பிரதம மந்திரி ஸ்ரீ சரன்சிங் திருக்கோணேஸ்வரத்திற்கு வருகை தந்தார். அவரது வருகையின் போது அப் பகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் நானும் திருக்கோணேஸ்வரத்தில் அவரை வரவேற்றவர்களுள் ஒருவராக இருந்தேன். அவர் வந்ததும் வாகனத்திலிருந்து இறங்கியபோது அவர் கூறிய வார்த்தைகள் நான் தட்சண கைலாயத்திற்கு வந்துள்ளேன்" என்பதாகும். நான் சிவபெருமானின் தெற்கு உறைவிடத்திற்கு வந்துள்ளேன் என்பது அதன் பொருளாகும். சிவபெருமானின் வடக்கு உறைவிடம் உத்திர கைலாசம் இந்தியாவின் வடக்கே உள்ள இமயமலையாகும்.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் கிழக்கு மாகாணம் தொடர்பாக ஒரு சில உண்மைகளைக் கூறுவதும் அவசியமானதாகும்.

1948இல் சுதந்திரம் பெற்றதிலிருந்து திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் கிழக்கு மாகாணம் முழுவதையும் சிங்கள மொழி பேசும் மக்களை பெரும்பான்மையினராகக் கொண்ட பகுதிகளாக மாற்றுவதற்கு இடைவிடா முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன என்பது நன்கறிந்ததொன்றாகும்.

> புகழ்பெற்ற வரலாற்றாசிரியர் பி.ஈ. பீரிஸின் கூற்றுப்படி முழு இந்தியாவிலும் போற்றுதலுக்குரியதான சிவ ஈஸ்வரங்கள் விஜயனின் வருகைக்கு வெகு காலத்திற்கு முன்னரே இலங்கையின் பல பாகங்களிலும் காணப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் புதிதாக நீர்ப்பாசனம் வழங்கப்பட்ட காணிகளில் பெரும்பான்மை சமூகத்தினரை பெரும் எண்ணிக்கைகளில் குடியேற்றும் பல குடியேற்றத் திட்டங்கள் நாட்டின் சட்டங்களையும் பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கை மற்றும் டட்லி சேனநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கை ஆகியவற்றை மீறி மிக உக்கிரமாக மேற்கொள்ளப்பட்டன. அத்தகைய சிங்கள குடியேற்றப் பகுதிகளில், சிங்களம் பேசும் மக்களை பலப்படுத்தும் வண்ணமும் தமிழ் பேசும் மக்களை பலவீனப்படுத்தும் வண்ணமும் புதிய தேர்தல் மற்றும் நிர்வாகப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் – திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை – 1827ஆம் ஆண்டிற்கும் 1981ஆம் ஆண்டிற்கும் இடையில் மக்கள் தொகைப் புள்ளிவிவரங்களை எடுத்துக் காட்டும் ஓர் அறிக்கையை நான் இத்துடன் இணைத்தனுப்புகிறேன்.

(10 ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

# எமது சுயமுயற்சியின் மூலம் வளங்களை வலுவாக்குவோம்

## கரித்தாஸ் கியூடெக் இயக்குனர் வலியுறுத்து




ஒருங்கிணைந்த மனித மேம்பாட்டு குடிமக்கள் கலந்துரையாடலும் சமூகங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு செயற்திட்டத்தின் கீழ் யாழ் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் மணியந்தோட்டத்தில் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான கண்காட்சியும் விற்பனையும் 12.06.2020 அன்று நடை பெற்றது.

இக்கண்காட்சியில் ஆனைக்கோட்டை, புதிய சோனகத்தெரு, சோனகத்தெரு, உதயபுரம், மணியந்தோட்டம் பகுதியில் உள்ள குழுக்கள் தமது சுயதொழில் முயற்சிப் பொருள்களை காட்சிப்படுத்தினர்.

இதை ஒட்டிய நிகழ்வில் ஆரம்ப சிறப்புரை யாற்றிய கியூடெக் கரித்தாஸ் இயக்குனர் எஸ். இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் –

எமது சூழலில் பல இன்னல்களை எதிர் கொண்ட போதும் தளராத மனஉணர்வுடன் சுயமுயற்சியால் முன்னேற முயன்றவர்களின் வெளிப்பாடுகள் எல்லா சமூகத்திற்கும் முன்மாதிரியான அடையாளமாக இக்கண்காட்சி அமைந்துள்ளமை பாராட்டத்தக்கது. எந்த இயற்கை சவால்களிலும் எம்மால் முயன்றால் முடியும் என்ற விடா முயற்சியை நிருபித்த சிறுகுழுக்களோடு இணைந்து இக் கொரோனா காலத்திலும் இவர்களின் கூட்டு முயற்சிகளை ஊக்கப்படுத்துவதில் எம்மால் முயன்றளவு பங்களிப்பை தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.– என்றார்.

இந்நிகழ்ச்சியில் கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர், பொருளாதார உத்திபோகத்தர், நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர், பங்குத் தந்தை மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் பங்கேற்று சிறப்பித்தனர். இக்கண் காட்சி நிகழ்வுக்கு பங்குத்தந்தை செபஸ்தியன் அடிகளார் இயூஜின் கல்வி வளாகத்தை தந்து உதவியதோடு தன்னுடைய ஆக்க பூர்வமான ஆலோசனைகளை வழங்கி ஊக்கம் கொடுத்தார்.

# மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த குருவானவர் ஜே.பி. தேவராஜா அடிகளார் அகவை 90 இல்!




மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த குருவானவர் ஜோசப் பெனடிக்ட் தேவராஜா அடிகளார் 16 ஜூன் 2020 அன்று அகவை 90 ஐத் தொட்டார்.

தாய் மறைமாவட்டமான யாழ் மறை மாவட்ட ஆயர் இல்ல சிற்றாலயத்தில் நடந்த நன்றித் திருப்பலியைத் தொடர்ந்து நடைபெற்ற பிறந்தநாள் கொண்டாட்டத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை முன்னாள் யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, முன்னாள் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆகியோர் கலந்து வாழ்த்து தெரிவித்து சிறப்பித்தார்கள்.

90 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த குருவானவர் ஜோசப் பெனடிக்ட் தேவராஜா அடிகளாருக்கு காலைக்கதிர் இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்.

# இங்கிலாந்து அரசி எலிசபெத் மகாராணியின் 94ஆம் பிறந்த நாளில் கத்தோலிக்க தலைவர்கள்

இங்கிலாந்து அரசி எலிசபெத் மகாராணி அவர்களின் 94வது பிறந்தநாள் 13 ஜூன் 2020 அன்று சிறப்பிக்கப்பட்டதையொட்டி திருப்பீடத்தில் பணியாற்றும் பிரித்தானியா தூதரகம் 15 ஜூன் 2020 அன்று ஏற்பாடு செய்திருந்த தேநீர் விருந்தில் 120க்கும் மேற்பட்ட கத்தோலிக்கத் தலைவர்கள் பங்கேற்றனர்.

இத்தேனீர் விருந்தின் ஆரம்பத்தில் பேசிய பொறுப்பாளர் கத்தோலிக்கத் திருஅவை ஆற்றிவரும் பணிகளுக்கு – குறிப்பாக கோவிட் 19 நெருக்கடி காலத்தில் தங்கள் உயிரையும் பணயம் வைத்துப் பணியாற்றி வரும் கத்தோலிக்கப் பணியாளர்களுக்கு – நன்றி கூறினார். மனித வர்த்தகம் இன்றைய உலகில் நிலவும் பல்வேறு அடிமை நிலைகள் மற்றும் மத உரிமை ஆகிய பிரச்சினைகளில், கத்தோலிக்கத் திருஅவையுடன் பிரித்தானிய அரசும் இணைந்து பணியாற்றுவது குறித்து அவர் குறிப்பிட்டுப் பேசினார்.

# இலங்கைக்கான வத்திக்கானின் புதிய தூதுவர் பிரயன் ஆண்டகை



இலங்கைக்கான வத்திக்கானின் புதிய தூதுவராக மேதகு கலாநிதி பிராயன் உடைக்வே ஆண்டகை அறிவிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கான வத்திக்கானின் புதிய தூதுவராக மேதகு கலாநிதி பிராயன் உடைக்வே ஆண்டகையை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்கள் சார்பாக வரவேற்று வாழ்த்துகின்றோம்.

# கத்தோலிக்க விசுவாசத்திற்கு முழு எதிரானது இனவெறி

இனவெறி என்பது கத்தோலிக்க விசுவாசத்திற்கு எதிரானது என்பதையும் இன,நிற பாகுபாடின்றி அனைத்து மக்களும் இறைவனின் மக்களே என்ற அடிப்படையிலேயே திருஅவை செயல்பட்டு வருவதாகவும் இங்கிலாந்தின் உயர் மறைமாவட்ட ஆயர்கள் இணைந்து கத்தோலிக்க பள்ளிகளுக்கு மடல் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

# இயேசுவின் திருஇதயத்திடம் செல்ல அஞ்சவேண்டாம்!

ஆண்டவர் நம்மை எப்போதும் இரக்கத்தோடு பராமரித்து வருகிறார். எனவே நாம் அவரை அணுகுவதற்கு அஞ்சாதிருப்போம். அவர் இரக்கமுள்ள இதயத்தைக் கொண்டிருக்கிறார். நம் மனக்காயங்களை – நம் மனதிலுள்ள பாவங்களை – அவரிடம் காட்டினால் அவர் நம்மை எப்போதும் மன்னிப்பார். எனவே இயேசுவிடம் செல்வோம். – என்ற சொற்கள் 19 ஜூன் 2020 அன்று சிறப்பிக்கப்பட்ட இயேசுவின் திருஇதய விழாவையொட்டி திருத்தந்தையின் டுவிட்டர் செய்தியில் இடம் பெற்றிருந்தன.

17ஆம் நூற்றாண்டில் பிரான்சில் யேசுவின் திருஇதயம் பலமுறை காட்சி கொடுத்தது. அதன் விளைவாக, கத்



தோலிக்க உலகில் இயேசுவின் திருஇதய பக்தி பரவியது. 19ஆம் நூற்றாண்டில் போலந்து நாட்டில் இயேசுவின் திருஇதயம் காட்சிகொடுத்தது. அதன் பயனாக 20ஆம் நூற்றாண்டில் இறை இரக்க பக்தி பரவியது.

# நோயுற்ற சகோதரரின் அருகில் ஜேர்மனியில் தங்குகிறார் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட்

முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் ஜேர்மனியில் எவ்வளவு காலம் தேவையோ அவ்வளவு காலம் தங்கியிருப்பார் என்று திருப்பீடத் தகவல் தொடர்பகத்தின் இயக்குனர் அறிவித்துள்ளார்.

ஜேர்மனியில் நோயுற்றுள்ள தன் உடன்பிறப்பான ஜோர்ஜ் இராட்சிங்கர் அடிகளாரைப் பார்ப்பதற்காக, முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் வத்திக்கானில் பணியாற்றும் ஒரு சிறிய குழுவுடன் அந்நாடு சென்றுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் தன் தனிப்பட்ட உதவியாளர் பேராயர் உடன் வத்திக்கான் காவல்துறையின் உதவித்தலைவர், திருத்தந்தையைப் பராமரிக்கும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர் மற்றும் உடன் உழைப்பாளர்களுடன் நோயுற்றிருக்கும் தன் சகோதரர் ஜார்ஜ் அடிகளாருடன் இருப்பதற்காக ஜேர்மனிக்குச் சென்றுள்ளார்.

இந்நிகழ்வு முற்றிலும் தனிப்பட்டது என்பதால் யாரும் தங்களைச் சந்திப்பதற்கு முயற்சிக்கவேண்டாம் என்று, முன்னாள் திருத்தந்தையும் அவரது சகோதரரும் கேட்டுக்கொண்டுள்ளனர் என்று மறைமாவட்ட அறிக்கை கூறுகிறது.

96 வயது நிரம்பிய ஜோர்ஜ் இராட்சிங்கர் அடிகளாருக்கும் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களுக்கும் மூன்று வயது வித்தியாசம் உள்ளது.

# பக்திமிக்க இந்துவாக உங்கள் ....

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல தசாப்தங்கள் தொடர்ந்து நீடித்த 1983ஆம் ஆண்டு வன்முறைகள் தொடங்கியதிலிருந்து மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்துள்ளமையினாலும் எந்தப் புள்ளிவிவரங்களும் நேர்மையானதெனவோ சரியானதெனவோ நம்ப முடியாததாலும் 1981ஆம் ஆண்டின் பின்னரான எந்த புள்ளி விவரங்களையும் நான் வழங்கவில்லை.

1948 ஆம் ஆண்டிற்கும் (சுதந்திரம்) கடைசியாக மேற்கொள்ளப்பட்ட குடித்தொகை மதிப்பீட்டு ஆண்டான 1981 ஆம் ஆண்டிற்கும் இடையில் சிங்கள மக்கள் தொகையில் ஏற்பட்ட தேசிய அதிகரிப்பு 238 வீதமாக இருந்த அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்கள் தொகை 883 வீதத்தால் அதிகரித்தது என்பது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிக்கையிலிருந்து தெளிவாகிறது. அதே காலப்பகுதியில், சிங்கள மக்கள் தொகை திருகோணமலை மாவட்டத்தில் 549.73 வீதத்தாலும் அம்பாறை மாவட்டத்தில் 1250 வீதத்தாலும் அதிகரித்தது. இது, முழுக்க முழுக்க குடியேற்றத் திட்டத்தினாலேயே - கிழக்கு மாகாணத்தில் உள்ள காணிகளில் வடக்கு கிழக்குக்கு வெளியிலிருந்து சிங்கள மக்களைக் கொண்டு வந்து குடியேற்றுதல் - ஏற்படுத்தப்பட்டது.

ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ்ப் பேசும் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டதாகும் என்பதோடு, தமிழ் இனத்துவ நிலத் தொடர்பு கொண்டதுமாகும். 1987ஆம் ஆண்டு ஜுலை 21 ஆம் திகதிய இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கமைய, இம் மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களாகும் என்ற அடிப்படையில் இப் பிரதேசங்கள் ஒரே அதிகாரப் பகிர்வு அலகாக ஒன்றாக இணைக்கப்பட்டன. இவ்விரு மாகாணங்களும் இனத்துவ ரீதியாக நிலத் தொடர்புடையவை என்பதோடு, வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும், வடக்கு, கிழக்கு மாகாணம் முழுவதிலும் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையினராக உள்ளனர் என்ற யதார்த்தத்தை முறியடிப்பதற்கு பலமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கிடையிலான இனத்துவ நிலத்தொடர்பைத் துண்டிப்பது நீண்டகாலமாக பேரினவாத அரசியல் தலைமைத்துவத்தின் ஒரு குறிக்கோளாக இருந்து வருகிறது. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சிஸ்டம் எல் என்ற ஒரு புதிய திட்டம் உருவாக்கப்பட்டது. அத் திட்டத்தின்கீழ் இதுவரை வடக்கிற்கு மகாவலி நீர் எதுவும் திருப்பப்படாதபோதிலும், வடக்குக் கிழக்கின் எல்லையில் அமைந்துள்ள மணலாறு அல்லது வெலிஓயா என்றழைக்கப்படும் பகுதியில் வடக்குக் கிழக்கிற்கு வெளியிலிருந்து கொண்டு வரப்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த ஆட்களுக்கு காணி பகிர்ந்தளிக்கப்பட்டு இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு வசதியேற்படுத்துவதற்கான நிறுவனரீதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இம்முயற்சிகள் ஒரு தொடர் நடைமுறையாக உள்ளன. எனினும், தமிழ் மக்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வரும் தமிழ்ப் பாரம்பரிய கிராமங்கள் இருப்பதனால் வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ் இனத்துவ நிலத்தொடர்பை இரண்டாகப் பிளவுபடுத்துவது வெற்றிபெற முடியவில்லை. அம்மக்கள் மீது வன்முறை பிரயோகிக்கப்பட்டது. திருகோணமலை மாவட்டத்தின் வடக்கு எல்லையில் அமைந்துள்ள தென்னமரவடி என்ற கிராமத்தில் வாழும் தமிழ் மக்கள் தாக்கப்பட்டனர். 1984 டிசெம்பரில் சிலர் கொல்லப்பட்டனர். அவர்தம் வீடுகள் எரித்து அழிக்கப்பட்டன. அவர்கள் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். அவர்கள் அதனை அண்டிய முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழத் தொடங்கினர். சிலர் மாத்திரமே தமது சொந்தக் கிராமமான தென்னமரவடிக்குத் திரும்பி வந்துள்ளனர்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கிடையிலான இனத்துவ நிலத்தொடர்பை இல்லாதொழிப்பதற்கு எந்தளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை இவ்வுண்மைகள் எடுத்துக் காட்டுகின்றன. தமிழ்பேசும் மக்களின் தரப்பில் மேற்கொள்ளப்பட்ட பலமான எதிர்ப்புகளும் கள யதார்த்தங்களும் இது வரை இது நிகழ்வதை தடுத்துள்ளன.

தமிழ் மக்கள் மிகவும் போற்றி வழிபடுகின்ற திருத்தலங்கள் வடக்குக் கிழக்கிற்கு வெளியிலும் அமையப்பெற்றுள்ளன. தென்கோடியில் அமையப்பெற்றுள்ள மிகவும் பக்தியோடு வழிபடப்படும் முருகக் கடவுளின் திருக்கோயிலான கதிர்காமம். மேலே குறிப்பிடப்பட்ட பண்டைய சிவாலயங்களுள் ஒன்றாகிய மேற்கில் அமைந்துள்ள முன்னேஸ்வரம். சிங்கள இனத்தின் முன்னோடியெனக் கருதப்படும் விஜயனின் வருகைக்கு முன்னரே தென்னிலங்கையில் இருந்ததாகக் கூறப்படும் பண்டைய சிவாலயங்களுள் ஒன்றாகிய தொண்டேஸ்வரம். இப்புராதனக் கோயில் தற்போது அழிவடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. தொல்பொருள் திணைக்களம் இப்பண்டைய இந்துக் கோயிலின் சிதைவுகளை போற்றிப் பாதுகாக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்காததேன்? தமிழ் இந்துக்கள் போற்றி வழிபடுகின்ற மேலும் பல இந்துக் கோயில்கள் நாடெங்கிலும் உள்ளன.

துரதிஷ்டவசமாக தொல்பொருள் திணைக்களம் ஒரு மதத்தை மாத்திரம் மேம்படுத்தி ஏனைய மதங்களின் சட்டபூர்வமான நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கிறதென்ற பெருமையை ஈட்டியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில தமிழ் மொழியில் கலவெட்டுக்களைக் கொண்டு இயங்கும் பௌத்த கோயில்கள் உள்ளன. தமிழில் கல்வெட்டுக்களைக் கொண்ட அழிவடைந்த பௌத்த கோயில்களின் சிதைவுகள் உள்ளன. இவை, கடந்த காலங்களில் சில குறிப்பிட்ட காலப்பகுதிகளில் தமிழ் இந்துக்கள் புத்த பகவானின் போதனைகளைப் பின்பற்றினர் என்பதை எடுத்துக்காட்டும் பண்டைய கல்வெட்டுக்களாகும். புத்த பகவான் ஒருபோதும் இந்து மதத்திற்கு எதிரானவரல்லர். இந்து மதத்தைத் தூய்மைப்படுத்துவதற்கு அவர் முயன்றார் எனவே நம்பப்படுகிறது.

தொல்பொருள் திணைக்களம் இவ்விடயங்களைப் பகிரங்கப்படுத்தி இவ்விடயங்கள் தொடர்பாக அனைத்து மக்களுக்கும் அறிவூட்டத் தவறிவிட்டதேன்? அது பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்குமிடையே நல்லெண்ண நம்பிக்கையையும் அமைதியையும் ஊக்குவிக்க உதவாதா? தொல்பொருள் திணைக்களத்தின் அத்தகைய தவறுதல்கள்தான் அவர்களின் செயற்பாடுகள் பற்றி நியாயமான அவநம்பிக்கையை ஏற்படுத்துவதோடு, அவர்கள் பாரபட்சமானவர்கள் என்ற கருத்தினையும் ஏற்படுத்துகின்றன.

புத்த பெருமான் ஆதிக்கக் கொள்கையைப் போதிக்க அல்லது பிரயோகிக்கவில்லை என்பது அவரின் பெயரால் தற்போது அதனைப் பின்பற்ற முனையும் சம்பந்தப்பட்ட அனைவரினாலும் நினைவில் கொள்ளப்படவேண்டும். அவரைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்பவர்களினால் அவரது போதனைகள் பின்பற்றப்பட்டால், இலங்கை அமைதியும் சமாதானமும் நிறைந்த ஒரு சொர்க்கபூமியாகத் திகழும்.

இச்செயலணிக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளுள் அத்தகைய தொல்பொருள் தலங்களுக்கு ஒதுக்கப்படவேண்டிய காணிகளை இனங்கண்டு அவற்றை முறையாகவும் சட்டபூர்வமாகவும் ஒதுக்கீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அடங்குகிறது.

இப்பணி பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது. அரச காணிகளை ஒதுக்கீடு செய்வது தொடர்பாக நாட்டில் சட்டங்கள் நிலவுகின்றன. அரச காணிகளும் அவற்றை ஒதுக்கீடு செய்தலும்தான் சுதந்திரம் பெற்றதிலிருந்து இந்த நாட்டில் மிகவும் சர்ச்சைக்குரிய விடயங்களாக இருந்து வருகின்றன. இக் கடிதத்தில் முன்னர் குறிப்பிடப்பட்ட பல விடயங்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்பேசும் மக்களின்மீது இழைக்கப்பட்டுவரும் அநீதிகளை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

மேற்காணும் பணி இச்செயலணிக்கு வழங்கப்பட்டதன் மூலம் சாதிக்க முனைவது என்னவெனில், இதுவரை நடந்தவற்றையெல்லாம் உறதிப்படுத்தி, பௌத்த மதத்தை பேணிப் பாதுகாத்து ஊக்குவித்தல் என்ற போர்வையில் அத்தகைய இடங்களில் உள்ள அத்தகைய இனங்காணப்பட்ட காணிகளில் மேலும் அதிகமான சிங்களவர்களைக் குடியேற்றுவதன்மூலம் கிழக்கு மாகாணத்தையும் வட மாகாணத்தின் முடிந்தவரையான பகுதிகளையும் சிங்களப் பெரும்பான்மைப் பகுதிகளாக மாற்றுவதும் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கிடையிலான இனத்துவ நிலத்தொடர்பினைத் துண்டிப்பதுமாகும். இது பயங்கரமானதும் தீங்கு விளைவிப்பதுமான விளைவுகளைக் கொண்ட ஒரு நீதியின் மீறலாகும்.

பௌத்த மதத்தைப் போற்றிப் பாதுகாத்து ஊக்குவிப்பதற்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. பௌத்த தலங்கள் தொடர்பில் எவரேனும் சட்டத்தை மீறி செயற்படுவார்களாயின், அத்தகைய நடத்தை தொடர்பில் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பணியை தற்போதிருக்கும் சட்டத்தை நிலைநாட்டும் நிறுவனங்கள் நிறைவேற்ற வேண்டும். பௌத்த கோயில்களும் நினைவிடங்களும் அந்நோக்கத்திற்கான போதுமான காணிகளில் அமைந்துள்ளன. அவை பல நூற்றாண்டுகளாக வெகுகாலம் அவ்வாறு நிலவுகின்றன. அந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மேலதிக காணி எதுவும் தேவையில்லை. சிங்கள இனத்தின் முன்னோடியான விஜயனின் வருகைக்கு வெகு காலத்திற்கு முன்னிருந்தே நினைவிற்கெட்டாத காலந்தொட்டு இப்பகுதிகளில் வாழ்ந்து வரும் தமிழ் இந்து மக்களான தமிழர்களதும், தமிழ் பேசும் மக்களதும் தற்போதைய மற்றும் எதிர்கால தொழில் மற்றும் வதிவிடத் தேவைகளை மீறி இப் பகுதிகளை சிங்கள பௌத்த மக்கள் வாழும் சிங்கள பௌத்தப் பிரதேசங்களாக மாற்ற விரும்பும் தனி நபர்களுக்கே மேலதிகக் காணிகள் தேவைப்படுகின்றன.

புதிய காணிகள் எதுவும் சுவீகரிக்கப்படாமலே பௌத்த மதத்தைப் போற்றிப் பாதுகாப்பதற்குத் தேவையானதெதுவும் செய்யப்பட முடியும் என்பதை நாம் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறோம். அவ்வாறு செய்வது அனைத்து மக்கள் மத்தியிலும் நல்லெண்ணத்தையும் அமைதியையும் உறுதி செய்யும்.

இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு உங்களுடைய தயவான கவனம் செலுத்தப்பட்டு அதற்கமைய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென நாம் கேட்டுக்கொள்கிறோம்.

அன்புடன்

தங்கள் உண்மையுள்ள,

ஆர். சம்பந்தன்

தலைவர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

பிரதி:- கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

பிரதம மந்திரி

# பிரசார வியூகத்தை வகுத்தது இ.தொ.கா.

பொதுத்தேர்தலில் வெற்றிநடைபோடும் விதத்தில் பிரச்சார வியூகத்தை வகுத்துள்ள இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ், எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் வெற்றி பிரச்சாரத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இ.தொ.காவின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நுவரெலியா மாவட்டத்தை மையப்படுத்தி முன்னெடுக்கப்படவுள்ள இந்த சூறாவளிப் பிரசாரம், ஒகஸ்ட் 3 ஆம் திகதிவரை தொடரும் என காங்கிரஸின் பிரச்சாரக் குழு அறிவித்துள்ளது.

காங்கிரஸின் இளைஞர் அணி, மகளிர் பிரிவு, தொகுதி அமைப்பாளர்கள் என முக்கிய பிரமுகர்களின் பங்குபற்றலுடன் நுவரெலியா மாவட்டத்திலுள்ள நான்கு தேர்தல் தொகுதிகளிலும் மக்கள் சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவை அனைத்திலும் ஜீவன் தொண்டமான் பங்கேற்று, காங்கிரஸின் எதிர்கால திட்டங்கள் பற்றி தெளிவுபடுத்தவுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைத்து மொட்டு சின்னத்தில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இம் முறை ஐந்து வேட்பாளர்களை நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, பதுளை, கண்டி ஆகிய மாவட்டங்களில் இ.தொ.கா. வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெறும் பிரதான பரப்புரைக் கூட்டங்களிலும் காங்கிரஸின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் பங்கேற்கவுள்ளார்.

எமது தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் திடீர் மறைவானது எமக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாகும். இறுதிமூச்சு இருக்கும்வரை மலையக மக்களுக்காகவே அவர் செயற்பட்டார். அவரின் கனவுகளை நிறைவேற்றுவதற்காகவே அவரின் ஜீவனாக ஜீவன் தொண்டமான் வந்துள்ளார்.

"முன்கூட்டியே பிரசாரத்தை ஆரம்பிக்க இருந்தோம். எனினும் தந்தையின் இழப்பால் ஜீவன் ஆழ்ந்த கவலையில் இருந்தார். ஆனாலும் மக்களுக்காக அவர் பிரச்சாரத்துக்கு தயாராகிவிட்டார். தந்தைக்கான 30 ஆம் நாள் கிரியை முடிவடைந்ததும் அவர் 26 ஆம் திகதி முதல் பிரச்சாரக் களத்துக்கு வருவார். - எனவும் பிரச்சாரக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.


## காணி விற்பனைக்கு

மாசியப்பிட்டி சந்தைக்கு அருகாமையில் (50 மீற்றர்) சங்கானை பிரதான வீதியில் 11.5 பரப்பு காணியும் வீடும் பயனுள்ள மரங்களுடன் விற்பனைக்கு உள்ளது.

Mr.Sujan,
077 809 99 66

புங்கன்குளம்றோட், புகையிரத நிலையத்துக்கு அண்மையில் (150 மீற்றர்) 13.5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

Sinnarajah Nimalraj
077 550 8779

## வீடு விற்பனைக்கு

மருதனார்மடம், உடுவில் மகளிர் கல்லூரி கல்லூரிக்கு (150 மீற்றர்) அருகில் 07 அறைகள் கொண்ட 28 பரப்பு அளவுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு - Kajan
071 085 2952

## வீடு வாடகைக்கு

கண்டி வீதி, கச்சேரியில் 03 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு - 076 313 6818

# கட்டுவன் மேற்கில் நூறு குடும்பங்களுக்கான ‘வீட்டு உணவுத் தோட்டத் திட்டம்’ ஆரம்பம்



யாழப்பாணம், ஜூன் 21

வீட்டு உணவுத் தோட்டத் திட்டத்திற்காக குடும்பங்களை அணி திரட்டுவதற்காக, நேற்று முன்தினம் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கட்டுவன் மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் வட கிழக்கு பொருளாதார அபிவிருத்தி நடுவம் (NEED CENTER) ஒரு சமூக ஆலோசனைக் கூட்டத்தை நடத்தியது.

இந்தக் கூட்டத்தை அரசின் கிராம அலுவலர் மற்றும் அரச பொருளாதார அபிவிருத்தி அலுவலர் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்தக்கூட்டத்தில் பங்கேற்ற குடும்பங்கள் சமீபத்தில் இலங்கை அரச படைகளால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வீட்டுத் தோட்டத் திட்டத்தில் பங்கேற்க விருப்பம் தெரிவித்திருந்தனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிக் குடும்பங்கள் இன்றையை தினத்துக்கு முன்னர் தங்கள் வீட்டு வளாகத்திற்குள் தோட்டத்திற்கான நில ஏற்பாடுகளைத் தொடங்குவார்கள். நில ஏற்பாடுகள் முடிந்ததும் அவர்களுக்கு விதைகள் மற்றும் நாற்றுகளை வட கிழக்கு பொருளாதார அபிவிருத்தி நடுவம் (NEED CENTER) விநியோகிக்கத் தொடங்கும்.

பயனாளிக் குடும்பங்கள் பயிரிடலை ஆரம்பித்த பின்னர், மூன்று மாதங்கள் வரை அவர்களுக்கான நிபுணத்துவ ஆலோசனையையும், கண்காணிப்பையும் வட கிழக்கு பொருளாதார அபிவிருத்தி நடுவம் (NEED CENTER) வழங்கும். இதனால் பயனாளிக் குடும்பங்கள் சிறந்த வீட்டுத் தோட்டங்களை உருவாக்குவது உறுதிப்படுத்தப்படுகிறது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் இந்த வீட்டு உணவுத் தோட்டத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் நோக்கம், பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கான பொருளாதாரத்தை மேம்படுத்துவதும், கோவிட்-19 க்கு பிந்தைய சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் அந்த மக்களுக்கு சத்தான உணவை வழங்க உதவுவதுமாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கட்டுவன் மேற்குப் பகுதியில் வாழும் நூறு பயனாளிகள் குடும்பங்களுக்கு உதவும் வகையில் இந்தத் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வீட்டு உணவுத் தோட்டத் திட்டம் கனேடிய தமிழர் பேரவையின் (Canadian Tamil Congress) ஆதரவுடன் கனடாவில் உள்ள நவா வில்சன் (Nava Wilson Professional Law Corporation Canada) சட்ட நிறுவனத்தின் நிதியுதவியினால் மேற் கொள்ளப்படுகிறது.

## வாக்குச்சீட்டுக்களை எண்ணும் ஒத்திகை நேற்று மட்டக்களப்பில்



வாக்குச்சீட்டுக்கள் எண்ணும் பரீட்சார்த்த ஒத்திகை நிகழ்வு நேற்று மட்டக்களப்பு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் நடைபெற்றது.

தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் சுகாதார அமைச்சும் இணைந்து சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிமுறை அறிவுறுத்தலுக்கு அமைய எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கான ஒத்திகை நிகழ்வுகளை நாடாளாவிய ரீதியில் நடத்தி வருகின்றது.

அதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான தேர்தல்கள் ஒத்திகை நிகழ்வு நேற்று மட்டக்களப்பு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட தேர்தல்கள் தெரிவத்தாட்சி அலுவலக அதிகாரியுமான கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட தேர்தல்கள் அலுவலக உதவி தேர்தல் ஆணையாளர் ஆர்.சசீலன் வழிகாட்டலில் நடைபெற்ற வாக்குச்சீட்டுக்கள் எண்ணும் ஒத்திகை நிகழ்வில் 20 உத்தியோகத்தர்களை கடமைகளுக்கு அமர்த்தி சுமார் 8000 ஆயிரம் வாக்குச்சீட்டுக்கள் எண்ணும் பரீட்சார்த்த ஒத்திகை நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

## இனி ஊடகவியலாளர்களுக்கான அடையாள அட்டை விநியோகிக்கும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சிடமா?

### இல்லை என மறுக்கின்றார் ஊடக அமைச்சர்



ஊடகவியலாளர்களுக்கான அடையாள அட்டை விநியோகிக்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கப்படவில்லை என ஊடக மற்றும் தகவல் தொழிநுட்ப அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அத்துடன், அரசாங்க தகவல் திணைக்களத்துக்கு இருக்கும் அந்த உரிமையை ஒருபோதும் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கப்படாது எனவும் அது அந்த இந்த அமைச்சுக்கு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் கூற்றில் எந்தவித உண்மையும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தினால் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் அடையாள அட்டையை பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இது ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கு விடுக்கும் அச்சுறுத்தலாகும் என்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து பந்துல குணவர்தன தெரிவிக்கையில் –

ஊடகவியலாளர்களுக்கு அரசாங்கத் தகவல் திணைக்களத்தினால் வழங்கப்படும் ஊடக அடையாள அட்டை விநியோகிக்கும் நடவடிக்கை தொடர்ந்தும் அரசாங்க தகவல் திணைக்களத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எமது எதிர்த் தரப்பினர் இதுதொடர்பாக பொய்ப் பிரசாரம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் கூற்றில் எந்த உண்மையும் இல்லை. அரசாங்க தகவல் திணைக்களத்துக்கு இருந்துவரும் அதிகாரத்தை நாங்கள் யாருக்கும் வழங்கவில்லை.

ஊடகவியலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் அதிகாரம் ஊடக அமைச்சுக்கே இருக்கின்றது. அந்த அதிகாரத்தை ஒருபோதும் நாங்கள் பாதுகாப்பு பிரிவுக்கு வழங்க மாட்டோம். அத்துடன் அவ்வாறான கோரிக்கை ஒன்றை பாதுகாப்பு பிரிவு எமக்கு முன்வைக்கவும் இல்லை.

மேலும், ஊடகவியலாளர்கள் எந்தத் தடைகளும் இன்றி தகவல்களைச் சேகரிப்பதற்கே குறித்த அடையாள அட்டை வழங்கப்படுகின்றது. கொரோனா வைரஸ் தாக்கம் நாட்டுக்குள் இருந்த சந்தர்ப்பத்தில், நாடு முழுமையாக அடைக்கப்பட்டிருந்த நிலைமையிலும் தகவல்களைச் சேகரிப்பதற்கு பாதுகாப்புப் பிரிவுடன் கலந்துரையாடி, ஊடகங்களுக்கு அனுமதி வழங்கியிருந்தோம்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தினால் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் அடையாள அட்டை விநியோகம், ஊடக அமைச்சினாலேயே மேற்கொள்ளப்படும் என்பதைப் பொறுப்புடன் தெரிவிக்கின்றேன்– என்று குறிப்பிட்டார்.

## மண்டூர் மகேந்திரன் காலமானார்





தமிழ்த் தேசியப் பற்றாளன் மண்டூர் மகேந்திரன் மட்டக்களப்பில் காலமானார். தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டப் பரப்பில் மிக நீண்ட வரலாற்று சுவட்டை தாங்கியவர் அவர்.

இலங்கைத் தமிரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா இளைஞராக இருந்த போது தமிழர் விடுதலைப் போராட்டத்துக்காக பல வருடங்கள் சிறை சென்ற சமயம் அவருடன் மண்டூர் மகேந்திரனும் ஒரே சிறைச்சாலையில் பல சித்திரவதைகளை ஏனைய தமிழ்க் கைதிகளுடன் சேர்ந்துஅனுபவித்தவர். அவரின் இறுதிக் கிரியையில் மாவை சேனாதிராசாவும் பங்கு பற்றினார்

காலைக்கதிர்
Kalaikkathir

# இராணுவத்தைக் கொன்று குவித்த கருணாவுக்கு எதிராக விசாரணை

## உடன் வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்து



கொழும்பு,ஜூன்21

**ஆயிரக்கணக்கான இராணுவத்தினரைக் கொன்று குவித்து போர்க்குற்றமிழைத்துள்ள கருணா அம்மானுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக உடனடியாக விசாரணை ஆரம்பிக்கப்படவேண்டும். இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்தியுள்ளது.**

விடுதலைப்புலிகளின் நிதி, கப்பல்கள் உட்பட அவர்கள் வசமிருந்த சொத்துகளுக்கு என்ன நடந்தது? இதன் பின்னணியில் இடம்பெற்ற 'டீல்'கள் எவை? அவற்றின் மூலம் செல்வந்தர்களாக ஆகியவர்கள் யார்? –என்பவற்றைக் கண்டறிவதற்காக சுயாதீன ஆணைக்குழுவொன்று அமைக்கப்படவேண்டும்எனவும் அக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த வர்ணசிங்க மேலும் தெரிவித்தாவது:–

ஆயிரக்கணக்கான இராணுவத்தினரைக் கொன்றுகுவித்தார் என விடுதலைப் புலிகள் அமைப்பின் இரண்டாவது தளபதியாக இருந்த கருணா அம்மான் அறிவித்துள்ளார். அவரின் இந்த கருத்து தொடர்பில் தேசப்பற்றாளர்களின் நிலைப்பாடு என்ன? கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டுவருவதற்காக பாடுபட்ட தேசப்பற்றாளர்கள் எங்கே?

போர்க்குற்றவாளியான கருணாவுக்கு மஹிந்த ராஜபக்ஷ தேசியப்பட்டியல் வாய்ப்பை வழங்கினார். இம்முறையும் அழைப்பு விடுத்துள்ளார். எனவே, உண்மையான தேசப்பற்றாளர்கள் யார் என்பதை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். போர்க்குற்றமிழைத்துள்ள கருணாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக உடனடியாக விசாரணை ஆரம்பிக்கப்படவேண்டும்.

குறிப்பாக விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர்களாகச் செயற்பட்டவர்கள் இருக்கின்றனர். குமரன் பத்மநாதனுடன் இவர்களுக்கு இருந்த கொடுக்கல், வாங்கல்கள் என்ன? விடுதலைப்புலிகள் அமைப்பிடம் இருந்த சொத்துகளுக்கு என்ன நடந்தது?அவை மீண்டும் யாரின் கைவசம் சென்றன?,கப்பல்கள் எங்கே? நிதிக்கு நடைபெற்றது என்ன? இவற்றின் மூலம் செல்வந்தர்கள் ஆனவர்கள் யார்? வியாபார வலையமைப்புக்கு என்ன நடந்தது? – என்பவற்றை கண்டறிவதற்காக உடனடியாக சுயாதீன ஆணைக்குழுவொன்று அமைக்கப்படவேண்டும் – என்றார்.

# கருணா வழங்கிய இரகசியத் தகவலினாலேயே புலிகளுடனான போரை விரைவாக முடித்தோம்

## அவரின் கூற்று பாரதூரமானதல்ல என்கிறது மஹிந்த அணி

கொழும்பு, ஜூன் 21

போர்க்காலத்தில் 2 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரம் வரையிலான இராணுவத்தினரை ஒரே இரவில் கொன்றதாக முன்னாள் பிரதி அமைச்சர் கருணா அம்மான் எனப்படும் விநாயக மூர்த்தி முரளிதரன் குறிப்பிட்டுள்ளமை ஒன்றும் பாரதூரமான விடயமல்ல. தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான இரகசியத் தகவல்களை அவர் இறுதியில் வழங்கியதன் காரணமாகவே போரை விரைவாக முடிவுக்குக் கொண்டுவர முடிந்தது.

– இவ்வாறு மஹிந்த அணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கடற்படைத் தளபதியான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

போர்க்காலத்தில் இரண்டு தரப்பிலும் படையினர் கொல்லப்பட்டார்கள். இராணுவத்தினரால் விடுதலைப்புலிகள் அமைப்பினர் போர்க்களத்தில் கொல்லப்பட்டார்கள். இராணுவத்தினருக்கு எதிராகவும் விடுதலைப்புலிகள் அமைப்பினர் பல்வேறு வழிமுறைகள் ஊடாகத் தாக்குதல்களை முன்னெடுத்தார்கள்.

போர்க்காலத்தில் கருணா அம்மான் கிழக்கு மாகாண படைத்தளபதி பொறுப்பாளராகச் செயற்பட்டார். இதன்போதே இந்தத் தாக்குதல் இடம் பெற்றிருக்கலாம்.

கருணா அம்மான் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து விலகி இராணுவத்துக்கும், அரசுக்கும் ஒத்துழைப்பு வழங்கினார். இதன்பின்னரே இவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு, அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பில் கருணா அம்மான் பல்வேறு இரகசியத் தகவல்களை அரசுக்கு வழங்கினார். இவர் வழங்கிய தகவல்களை அடிப்படையாகக்கொண்டே இறுதிக்கட்டப்போர் குறுகிய காலத்தில் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆகவே, தற்போது இவர் குறிப்பிட்டுள்ள கருத்து இராணுவத்தில் உயிர்நீத்தவர்களின் உறவுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகக் காணப்படுகின்றது.

எனவே, இவ்வாறான கருத்துக்களைக் குறிப்பிடுவதை இவர் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இறுதிக்கட்டப் போரை மிக விரைவில் நிறைவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற தேவை காணப்பட்டதால் இவரது உதவியை அப்போது பெற்றுக் கொண்டோம்.

இறுதிக்கட்டப் போரில் இரண்டு தரப்பிலும் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. போரை நோக்கிப் பயணிக்கையில் இழப்புக்களை நிச்சயித்துக்கொள்ள வேண்டும் என்பது இராணுவத்தினருக்குச் சாதாரண ஒரு விடயமாகும்.

முப்பது வருட போரை நிறைவுக்குக் கொண்டு வந்ததன் காரணமாகவே இன்று தமிழ், முஸ்லிம் மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றார்கள் – என்றார்.

# கருணா கூறியவை குறித்து விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு அமையுங்கள்!

## இப்படிக் கோருகின்றது ஐக்கிய தேசியக் கட்சி

'ஆனையிறவில்24மணிநேரத்துக்குள் 2 ஆயிரம் படையினர் கொல்லப்பட் டனர் என கருணா வெளியிட்டுள்ள கருத்து பாரதூரமானது. இது தொடர்பில் விசாரணை நடத்தி உண்மைகளை கண்டறிவதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்படவேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று மாலை ஐக்கிய தேசியக்கட்சியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:–

கருணா என்ற புலி உறுப்பினர் வெளியிட்டுள்ள கருத்து பாரதூரமானது. 1977 முதல் ஆனையிறவை ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பாதுகாத்தது. 2000ஆம்ஆண்டுசந்திரிக்காஆட்சியின் போதே ஆனையிறவு வீழ்ந்தது. இவ்வாறு ஆனையிறவு வீழ்ந்தபோது ஒரே நாளில் 2 ஆயிரம் படையினரை கொன்றனர் எனக் கருணா அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் எமக்கு கூட தெரியாது. அப்படியானால் இந்த நாட்டில் தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளன. இரண்டாயிரம் பேரை எப்படி 24 மணிநேரத்துக்குள் கொல்வது? அப்படியெனில் அங்கு அப்பட்டமாக மனித உரிமை மீறல் இடம் பெற்றிருக்க வேண்டும்.

இரண்டாயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்ற தகவலை தற்போதுதான் அறிகின்றேன். உண்மையிலேயே என்ன நடந்துள்ளது, நாட்டுக்கு தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளனவா அல்லது சூழ்ச்சியா?

இராணுவத்தில் இருந்த ஒருவரே ஜனாதிபதியாக பதவி வகிக்கின்றார். அவருக்கு இராணுவத்தின் மீது பற்று உள்ளது. எனவே, இவை தொடர்பில் விசாரிப் பதற்கு ஜனாதிபதி ஆணைக் குழுவொன்றை அமைக்குமாறு ஐக்கிய தேசியக்கட்சி கேட்டுக்கொள்கின்றது. கருணாவிடமும் விசாரணை நடத்தப்பட்டு, என்ன நடந்தது என்பது அறியப்பட வேண்டும்.– என்றார்.

# புலனாய்வு உறுப்பினரின் மரணத்தில் சந்தேகம்

கல்முனையில் உள்ள அரச புலனாய்வுப் பிரிவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட புலனாய்வுப் பிரிவு பொலிஸ் உறுப்பினரின் மரணத்தில் சந்தேகம் எழுந்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

யாழ்ப்பாணம், நெல்லியடியைச் சேர்ந்த 21 வயதுடைய கமல்ராஜ் என்பவர், கல்முனை உள்ள அரச புலனாய்வுச் சேவையின் அலுவலகத்தில் பணியாற்றி வந்த நிலையில், நேற்றுத் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இவர் தன்னைத் தானே சுட்டுக் கொண்டு உயிரை மாய்த்தார் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன. எனினும், இவரது மரணத்தில் சந்தேகம் எழுந்துள்ளதாக கூறப்படுகிறது.

இதையடுத்து, உயிரிழந்த அரச புலனாய்வுச் சேவை அதிகாரியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 4 மாதங்களில் விபத்துகளில் 736 பேர் பலி

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதக் காலப்பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துகளால் 736 பேர் உயிரிழந்துள் ளன ரெனப்போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.06.2020 இல் வெளியிடப்பெற்றது.